விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்




# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | புரட்டாதி 19 சனிக்கிழமை (05.10.2002) | தொலைபேசி~ 2223378 | ஒலி 290

## சமாதான முயற்சியில்
# ஜனாதிபதி -பிரதமரை இணைக்க
# ஐ.தே.முன்னணிக்குள் முயற்சி

## சிரேஷ்ட -அமைச்சர் ஒருவர் ஏற்பாடு

(நமது நிருபர்)

**இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும் முன்னெடுத்துச் செல்லும் தாய்லாந்துப் பேச்சுவார்த்தையை அடுத்து எதிரும் புதிருமாக செயற்பட்டு வரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் இணக்க வைப்பதற்கான தீவிர முயற்சியில் ஐக்கிய முன்னணி அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் ஈடுபட்டுள்ளதாக அரச வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.**



இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையே யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு 8மாதங்கள் கடந்து தாய்லாந்தில் இடம்பெற்ற முதலாம்

கட்டச் சமாதானப்பேச்சுவார்த்தைகள் சுமூகமாக முடிவுற்ற நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையில் சமாதானப்பேச்சுக்கள் குறித்து நிலவிவரும் முரண்பாடுகளைக் களைந்து இருவருக்கும் இடையே இணக்கம் ஒன்றை ஏற்படுத்த அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் முயன்று வருகிறார்.

தாய்லாந்துப் பேச்சில் கலந்து கொண்ட இந்தச் சிரேஷ்ட அமைச்சரின் சமரச முயற்சியின் முதற்கட்டமாக சமாதானப் பாதையில் எதிரும் புதிருமாக பயணிக்கும் பிரதமரையும் ஜனாதிபதியையும பல தடவைகள் சந்திக்க வைத்து இனப்பிரச்சினைத் தீர்வு குறித்தும் தாய்லாந்துச் சமாதானப்பேச்சுக்கள் குறித்தும் கலந்துரையாடுவதற்குமான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றார்.



தமிழீழ விடுதலைப்புலிகளின் தடை நீக்கம், இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப்புலிகளிடம், கையளிப்பது தொடர்பாகவே ஜனா

(10ம். பக்கம் பார்க்க)

## நோர்வே அமைச்சர் இன்று கொழும்பு வருகிறார்.

### வன்னிக்கு சென்று பிரபாவை சந்திப்பார்

(கொழும்பு)

அரசுக்கும், விடுதலைப்புலிகளிற்கும் இடையில் தாய்லாந்தில் இம்மாதம் 31ம் திகதிநடைபெறவுள்ள இரண்டாம் கட்டப்பேச்சுவார்த்தை தொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்ளவதற்கு நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் இன்று கொழும்புக்கு வரவுள்ளார்.

கொழும்பு வரும் வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவுள்ள அரசு தரப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்து அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து வன்னி செல்லும் அவர் தமிழீழ விடுதலைப்

(10ம் பக்கம் பார்க்க)

## மயிலிட்டி முகாமைச் சேர்ந்த சிப்பாய் புலிகளிடம் சரண்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் மயிலிட்டி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் இரத்திநாயக்கா ஜெகன்னுகுமார (வயது 26) நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறையினரிடம் சரணடைந்துள்ளார்.

ஹபறணை மாத்தளையைச் சேர்ந்த இந்த இராணுவச்சிப்பாய் 1995ம் ஆண்டு இராணுவத்தில் இணைந்துள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் 1998ம் ஆண்டு லீவில் சென்ற பின்னர் கடமைக்குத் திரும்பாமையால் பொலிசார் இவரைக் கைது செய்து மீண்டும் இராணுவத்தில் சேர்த்தனர்.

அதன் பின் மயிலிட்டி இராணுவ முகாமில் கடமையாற்றிய இவர்

(10ம் பக்கம் பார்க்க)

# மயிலிட்டி முகாமைச் சேர்ந்த சிப்பாய் புலிகளிடம் சரண்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் மயிலிட்டி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் இரத்திநாயக்கா ஜெகனுகுமார (வயது 26) நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறையினரிடம் சரணடைந்துள்ளார்.

ஹபறணை மாத்தளையைச் சேர்ந்த இந்த இராணுவச்சிப்பாய் 1995ம் ஆண்டு இராணுவத்தில் இணைந்துள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் 1998ம் ஆண்டு லீவில் சென்ற பின்னர் கடமைக்குத் திரும்பாமையால் பொலிசார் இவரைக் கைது செய்து மீண்டும் இராணுவத்தில் சேர்த்தனர்.

அதன் பின் மயிலிட்டி இராணுவ முகாமில் கடமையாற்றிய இவர்

(10ம் பக்கம் பார்க்க)

# சாகும்வரை உண்ணாவிரதம் மட்டு. சிறைக்கைதிகள் குதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, சிறையில் தடுத்து வைக்ப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் நேற்று முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதப் பேராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கோரி இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள 19அரசியல் கைதிகளில் 18பேர் உண்ணாவிரதப் பேராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் ஒருவர் சுகயீனம் காரணமாக போராட்டத்தில் ஈடுபடவில்லை எனவும் ,சிறைச்சாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

எந்தவொரு அரசியல் வாதிகளையும் இம்முறை தாம் சந்திக்கவோ

(10ம் பக்கம் பார்க்க)

# புலிகள் கைது செய்த 6படையினரையும் விடுவிக்கக் கோரி திருமலையில் மறியல்

(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள் ஆறு இராணுவத்தினரையும் விடுதலை செய்யக்கோரி நேற்று ஹர்த்தால் மற்றும் மறியல் போாரட்டம் என்பன திருகோணமலையில் சிங்கள மக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெளத்த பிக்குகள் உட்பட கைதானவர்களின் உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்களும் இந்த மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தின் பிரதான போக்குவரத்து பாதைகளான மத்திய. வீதி, பிரதான வீதி, ஏகாம்பரம் வீதி போன்ற வீதிகளில் மரக் குத்திகளைப் போட்டு வீதித்

(10ம் பக்கம் பார்க்க)



இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையே யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு 8மாதங்கள் கடந்து தாய்லாந்தில் இடம்பெற்ற முதலாம் களைந்து இருவருக்கும் இடையே இணக்கம் ஒன்றை ஏற்படுத்த அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் முயன்று வுருகிறார்.

தாய்லாந்துப் பேச்சில் கலந்து கொண்ட இந்தச் சிரேஷ்ட அமைச்சரின் சமரச முயற்சியின் முதற்கட்டமாக சமாதானப் பாதையில் எதிரும் புதிருமாக பயணிக்கும் பிரதமரையும் ஜனாதிபதியையும பல தடவைகள் சந்திக்க வைத்து இனப்பிரச்சினைத் தீர்வு குறித்தும் தாய்லாந்துச் சமாதானப்பேச்சுக்கள் குறித்தும் கலந்துரையாடுவதற்குமான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றார்.



தமிழீழ விடுதலைப்புலிகளின் தடை நீக்கம், இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப்புலிகளிடம், கையளிப்பது தொடர்பாகவே ஜனா

(10ம். பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதிக்கு அரசு விளக்கம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெற்று முடிந்த முதற்கட்டச் சமாதானப்பேச்சு குறித்து பொருளாதாக மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

கடந்த 9மாதகாலமாக அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டு வந்த சமாதான முயற்சிகள் குறித்து தற்போது முழுமையாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் சமாதானப்பேச்சுவார்த்தையின் போது முக்கிய பிரச்சினைகள் பற்றி எதுவும் ஆராயப்படவில்லை என்று ஜனாதிபதி தெரிவித்ததாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சியின் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து அரசாங்கமும் எதிர்க்கட்சியும் அடிக்கடி கலந்துரையாடல்களை நடத்துவது என்றும் இக்கலந்துரையாடல்கள் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலும் ஜனாதிபதியாலும் பிரதமராலும் நியமிக்கப்படும் பிரதிநிதிகளுக்கிடை

(10ம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே!
நாளை உங்களின்
சங்கு நாதம்
விஷேட அரசியல்
கட்டுரையுடன்
தவறாது கேட்டு வாங்குங்கள்

# நோர்வேத் தூதுவர் வெஸ்பேர்க் கொழும்பில் புலிகளைச் சந்திப்பார்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன்வெஸ்பேர்க் கொழும்பில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரமுகர்களைச் சநிதித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தாய்லாந்தில் இடம் பெற்ற முதற்கட்ட பேச்சுவார்த்தை தொடர்பாகவும், இம்மாதம் 31ம் திகதி தாய்லாந்தில் இடம் பெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சங்கள் தொடர்பாகவும் கொழும்பில் உள்ள விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் நோர்வேத்தூதுவர் வெஸ்பேர் கலந்துரையாடவுள்ளார்.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார்ஹெல்கிசன் வன்னியில் விடுதலைப்புலிகளுடன் நடத்தவிருக்கும் பேச்சுகளுக்கு முன்னோடியாக இக்கலந்துரையாடல் இடம் ,பெறவுள்ளது. (ம)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# செய்தித் துளிகள்

## செயலமர்வுகள் இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக யாழ். இந்துக்கல்லூரி நிலைய கல்வி டிப்ளோமா, கல்விமாணி செயலமர்வுகள் இன்று நடைபெறமாட்டாது எனவும் அடுத்த செயலமர்வுகள் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறும் எனவும் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ச.வில்வநாதன் அறிவித்துள்ளார். (உ-3)

## முதியோர் விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி அரச முதியோர் இல்ல சர்வதேச முதியோர் விழா எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு கே.வி. சிவநேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக நலத்துறை அமைச்சு புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலாளர் எஸ். அமிர்தலிங்கமும் கௌரவ விருந்தினராக அரசாங்க அதிபர் கே.சண்முகநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக சமூக நலத்துறைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என். ஆர். ரஞ்சினி மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலாளர் செ. ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

## நட்டஈடு வழங்கப்படவில்லை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில், மீளக்குடியமர்ந்து பல வருடங்களாகியும், மீளக்குடியமர்வு; வீட்டு அழிவு நட்டஈட்டுக் கொடுப்பனவு பெறாத நிலையில் பலர் இருப்பதாகத் தெரியவருகின்றது.

மேற்படி கொடுப்பனவுகளுக்கு பலர் முத்திரையில் கையொப்பம் இட்டு பல வருடங்களாகியும் கொடுப்பனவுகள் எதுவும் இன்றுவரை வழங்கப்படவில்லை.

இதேவேளை, அண்மையில ஏ-9 கண்டி வீதியூடாக மீளக்குடியமர்ந்துள்ளவர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவுகளுக்கு பதிவுகள் யாழ். குடாநாடு எங்கும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (உ-75)

## பூப்பந்தாட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகளை ஒட்டி எதிர்வரும் 8,9 ஆம் திகதிகளில் இடம் பெறவிருந்த யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பூப்பந்தாட்டப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ். வலயக்கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. (உ-6)

## கிளினிக் ஆரம்பம்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் புனர்வாழ்வு பகுதியில் செயற்கை அவயவங்களை பொருத்தும தாந்தக் கிளினிக் எதிர்வரும 9 ஆம் திகதி முதல மீண்டும ஆரம்பிக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வுப் பகுதி பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

சிகிச்சையை மேற்கொள்ளும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் வைத்தியநிபுணர் விடுமுறையில் சென்றதால் கடந்த இரண்டுமாத காலமாக இக் கிளினிக் நடைபெறாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-2) 3

## சமாதானக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கியூடெக் சமாதானக் குழுவின் ஏற்பாட்டில் இன்றும் நாளையும் மு.ப. 10.00 மணி முதல் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் சமாதானக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

கியூடெக் சமாதானக் குழுவினர் இக்கருத்தரங்கை நடத்தவுள்ளனர். (உ-6)

## மெய்வல்லுநர் போட்டி

(மந்திகை)

வதிரி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பி.ப. 2 மணிக்கு பாடசாலைக்கு அண்மையில் அமைந்துள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வி. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமராட்சி கல்வித் திணைக்கள நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (உ-23)

## தேசிய மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 10, 11,12,13ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ் மாவட்டப் பாடசாலை வீரர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-6)

## ஆசிரியர் தினம்

(மந்திகை)

வதிரி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை சர்வதேச ஆசிரியர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் எஸ்.சரவணபவன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. (உ-23)

## நாளை கொடியேற்றம்

(நீராவியடி)

யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேசப் பெருமாள் ஆலயவருடாந்த மகோற்சவம் ஞாயிற்றுக்கிழமை 10.15 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துதினங்கள் நடைபெறஉள்ளது எதிர்வரும் 14ந்திகதி திங்கட்கிழமைதேர் உற்சவம் நடைபெறும். (த-265)

## சைவத்திருமுறை விழாவும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

சங்கானைக்கல்விக் கோட்ட சைவத்திருமுறை விழாவும் சைவநெறித்தொண்டு படு நிகழ்ச்சிப் பரிசளிப்பு வைபவமும் இன்று காலை 8.00 மணிக்கு பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சங்கானைக் கல்விக்கோட்டக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் சி. செல்லையா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதி ஆகியோர் அருளாசி உரைகளையும், இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் ஆசியுரையையும் வழங்குவார். (த-5)

## நாளைகிளைக்குழு தேர்தல்

(யாழ்ப்பாணம்)

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளைக் குழுததேர்தல் நாளைநடைபெறவுள்ளது.

கிளைக்குழு அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான இத்தேர்தலில் வாக்களிக்கத்தகுதியான அங்கத்தவர்களும், வன்னியில் இருந்து வந்த சங்க அங்கத்தவர்களில் வாக்களிக்கத் தகுதியானவர்களும் கலந்துகொள்ளலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## ஆசிரியர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம)

சர்வதேச ஆசிரியர் தினமான ஒக்டோபர் 6ம் திகதி வாரஇறுதி நாளாக அமைவதால் 4ம் அல்லது 7ம் திகதியில் ஆசிரியர் தினநிகழ்வுகளை நடத்துமாறு வடக்குக் கிழக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (த-5)

களுத்துறை சிறையில் உண்ணா விரதமிருந்த

# ஐவர் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

கடந்த நான்கு நாட்களாக நீராகாரம் கூட அருந்தாது தொடர் உண்ணா விரதம் இருந்துவரும் களுத்துறைச் சிறைச்சாலை தமிழ் அரசியல் கைதிகளில் ஐவரின் நிலை மோசமடைந்துள்ளதாக களுத்துறை சிறைச்சாலையின் விசேட அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் சிறைச்சாலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய 134 தமிழ் அரசியல் கைதிகளும் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவருவதாகவும், அவர்களில் 13 பேர் சிறைச்சாலைக் கூரை மீது ஏறி உண்ணாவிரதம் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கப்பிரதிநிதியொருவர் தமது விடுதலை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆரம்பித்த இவ் உண்ணாவிரதப் போரில் வெலிக்கடையைச் சேர்ந்த 11 பெண் அரசியல் கைதிகளும் கடந்த முதலாம் திகதி முதல் குதித்திருப்பது தெரிந்ததே.

இதேவேளை, மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 16 தமிழ் அரசியற் கைதிகளும் நேற்றுக் காலை தொடக்கம் உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

வடிசாலையை கொத்தணி நிர்வாகத்திடம் ஒப்படைக்கவேண்டாம்

# தமது நிலைப்பாட்டை விளக்குகின்றனர் திக்கம் வடிசாலை ஊழியர்கள்

(யாழ்ப்பாணம்)

திக்கம் வடிசாலையை கொத்தணி நிர்வாகத்திடம் ஒப்படைப்பதால் ஏற்படும் பாதிப்புக்களகுறித்து அல்வாய் மேற்கு திக்கம்வடிசாலை ஊழியர்கள்கையொப்பமிட்டு அறிக்கை ஒன்றினை அனுப்பிவைத்துள்ளனர் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்தபல மாதங்களாக எமது நிறுவனத்தைப்பற்றியும் எமது ஊழியர்களைப்பற்றியும் பல்வேறுகருத்துக்கள் வெளிவருகின்றன இவ்வாறு உண்மைக்கு மாறானதகவல்கள்வெளிவருவதையிட்டுநாம் மிகவும் மனவேதனை அடைகின்றோம்.

● எமதுநிறுவன அனைத்துஊழியர்களுக்கும் அரச நிரந்தர நியமனமும், புதிய சம்பளமும் 2002.01.01ல் இருந்துவழங்கப்படுகின்றது

● பணியாளர்களுக்கான மிகைஊதிய கொடுப்பனவிற்கு நடவடிக்கைகள் எடுககபபடுகின்றன.

● 2002.01.01பின்பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களினால் கொண்டுவந்து தரப்படும் கள்ளுக்குரியகொடுப்பனவுகள் அனைத்தும் உடனுக்குடன் வழங்கப்பட்டுள்ளன ஆனால் கொத்தணிகாலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கள் கொள்வனவுப் பணம் உடனுக்குடன் செலுத்த முடியாமல் இருந்ததுடன யாழ்மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கள முழுவதும் கொள்வனவு செய்யப்பட முடியாதநிலையும இருந்துவந்தது ஆனால் தற்போது எவ்வளவு கள்ளினையும் கொள்வனவுசெய்வதற்கு திக்கம்வடிசாலை தயாராக இருப்பதுடன் அடுத்தபருவகாலத்தில் கொத்தணிகாலத்தில் நிர்ணயிக்கப்பட்டகள் கொள்வனவு விலையை செறிவிற்கு 20சதத்தால் அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சங்கங்கள் ஊடாக கள்ளினைஎமதுவடிசாலைக்கு வழங்கிய சங்க அங்கத்தவர்களுக்கு மிகைலாபம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கபபட்டுள்ளது அவர்கள் தங்கள் சங்கங்கள் ஊடாக இதனைப் பெறுவதற்கும நடவடிக்கைகள் எடுககப்படுகின்றன.

● மேலும் அண்மைக்காலத்தில் திககம்வடிசாலை கணக்கில் இருந்து ஆலயங்களுக்கு ஓட்டோ வாங்கி கொடுக்கப்படுவதாக செய்திகள் வெளிவந்தன. ஆனால் அதில் எவ்வித உண்மையுமில்லை.

எமது நிறுவன வருமானம் முழுவதும் எமது திக்கம் வடிசாலை வங்கிக் கணக்கிலேயே தொடர்ந்தும பேணப்பட்டு வருகிறது.

அந்த வருமானத்திலிருந்தே நாம எமது வடிசாலையை நவீன தரத்திற்கு உயர்த்துவதற்கு திட்டங்கள தயாரித்து நடைமுறைப்படுத்துவதுடன், எமது மாவட்ட சீவல் தொழிலாளரின் பிள்ளைகளின் கல்வி சுகாதார வசதிகளை அதிகரிப்பதற்கான திட்டங்களும் பயன்படுத்த திட்டமிட்டுள்ளோம். இதற்கு பனை அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர்களும் உதவமுன்வந்துள்ளனர் இந்த நிலையில் எமது வடிசாலையை கொத்தணி நிர்வாகத்திடம் ஒப்படைத்தால் ஏற்படப்போகும் பாதிப்புக்களை விளக்கி ஊழியர்களாகிய நாம் கையொப்பம் இட்டு தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல்துறையினருக்கும், கௌரவ இந்து கலாசார அமைச்சர் ஊடாக பிரதம மந்திரி ரணில்விக்கிரமசிங்காவுக்கும் மகஜர் கையளிக்க உள்ளோம். மேலும் கடந்த பல வருடங்களாக ஏமாற்றப்பட்ட பணியாளர்களுக்கு 2002. 01. 01.லிருந்து நிரந்தர நியமனமும் புதிய சம்பள உயர்வும் வழங்கியதற்காக பனை அபிவிருத்திச் சபை தலைவர், இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர், செயலாளர் ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்வதாகவும் அவ்வறிக்கையில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# பக்கியல - அம்பாறை வீதி மீண்டும் இன்று திறப்பு

(அம்பாறை)

கடந்த 12 வருடங்களாக மூடப்பட்டிருந்தபக்கியல அம்பாறை வீதிமீண்டும் இன்று காலை பொதுமக்கள் போக்குவரத்துப் பாவனைக்காக திறந்துவிடப்படவுள்ளது என சுகாதாரஅமைச்சின் இணைப்பாளர் ஏ.ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இப்பாதையை பாவனைக்காக திறந்துவிடும் நிகழ்ச்சியில் சுகாதாரஅமைச்சர் பி தயாரத்ன தமிழீழவிடுதலைப்புலிகளின் மட்டுஅம்பாறை அரசியலதுறை பொறுப்பாளர் கௌசல்யன், மாவடிமுமாரிக்கோட்ட துணைப் பொறுப்பாளர் சுதா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்வீதி திறந்துவிடப்படுவதால் அம்பாறைமாவட்டத்தின் 35ம, 37மகிரமங்களை சேர்ந்தமக்கள் மீளக்குடியமர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (உ-8)

# 4 பல. நோ. கூ. சங்க கிளைக்குழுத் தேர்தல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள நான்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கிளைக் குழுத் தேர்தல்களை இம் மாதத்தில் நடத்துவதற்கு கூட்டுறவுத் திணைக்களம நடவடிக்கை எடுத்துள்ளது.

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் 12ஆம் திகதியும், தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் 19ஆம் திகதியும், நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் 20ஆம் திகதியும, வடமராட்சி- கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல் 26ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இதேவேளை இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தற்போது கிளிநொச்சி மாவட்டத்திற்கு சென்றுள்ளதினால் அதன கிளைக்குழுத் தேர்தல் 13ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தல்கள் வன்னியில் இச்சங்கங்கள் இயங்கியபோது அங்கு அங்கத்தவர்களாக சேர்ந்தவர்களும் வாக்களிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# முப்படைகளினதும் முக்கியபுள்ளிகளின் உதவியுடன்

# அரசைக் கவிழ்க்க திட்டமிடுகிறார் ஜனாதிபதி

## அமைச்சரவைக் கூட்டத்தில் பிரஸ்தாபம்

(கொழும்பு)

பிரதமர் ரணில், ஜனாதிபதியுடன் அரசியற் சகவாழ்வுக்கு சாதகமானமுறையில் நடந்து கொண்டிருப்பினும், ஜனாதிபதி பிரதமருக்கெதிராக அவதூறுகளை பரப்பிவருகிறார். அரசியற் சகவாழ்வுக்குஜனாதிபதி தயாரில்லை என்பதையே இதுகாட்டுகிறது.

கடந்த புதன்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்படிவிடயம் காரசாரமாக விவாதிக்கப்பட்டது.

இதுவரைகாலமும் அமைச்சர்களை அவதூறாக விமர்சித்துவந்த ஜனாதிபதி இப்பொழுது பிரதமர் மீதும் அவதூறு பொழிய ஆரம்பித்துள்ளார். இவர் மீது அரசியற் குற்றச் சாட்டு பிரேரணையை கொண்டு வருவதற்குபோதிய காரணங்கள் உண்டு. தாமதமின்றிஅரசியற்குற்றச் சாட்டு பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும் என்று இவ் அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்கள்ஏகமனதாக குரல் கொடுத்தனர்.

இனிமேலும் பொறுக்கத் தேவையில்லை 19வது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு எமக்கு மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மைப் பலம் உள்ளது. இதனையறிந்துள்ளவரான ஜனாதிபதி அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரமுகர்கள் சிலரையழைத்து, இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தான் எடுத்துவருவதாகவும், இவ்விடயத்தில் முப்படைகளினதும் சிலமுக்கிய புள்ளிகளின்உதவிகளைபெறவிருப்பதாகவும் கூறியுள்ளார் என்று அமைச்சர் ராஜித்சேனாரத்ன அங்கு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அவதூறு உரையின் ஒளிநாடாவை ஆராய்ந்தபின் இதுபற்றி இறுதிமுடிவு எடுப்பதென்று முடிவு செய்யப்பட்டது. (உ)

## ஐரோ. யூனியன் 6.3 மில்லியன் யூரோ வழங்கியது

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டின் புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டங்களுக்கென ஐரோப்பிய யூனியன் 6 3 மில்லியன் யூரோவை ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது என நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா தெரிவித்தார்.

இந்த நிறுவனம் எத்தகைய திட்டங்களை அமுல் செய்யவுள்ளது என்பது பற்றித் தனக்கு இதுவரையும் தெரிவிக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

(உ-77)

# சாவகச்சேரியில் படையினர் முகாம் அமைக்கும் முயற்சி

## மக்கள் திரண்டு முறியடிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி கோயிலாக்கண்டிப் பகுதியில் பாரிய இராணுவ முகாம் ஒன்றை அமைப்பதற்குப படையினர் மேற்கொண்ட முயற்சிபொது மக்களின் முயற்சியினால் நேற்று முன்தினம் முறியடிக்கப் பட்டது.

கோயிலாக்கண்டிமத்திப்பகுதியில்நேற்றுமுன்தினம் பாரிய இராணுவ முகாம் ஒன்றை அமைக்கும் நோக்குடன் நூற்றுக்கு மேற்பட்ட படையினர் மரக்குற்றிகள், முட்கம்பிகள் சகிதம் சென்று முகாம்அமைக்கும் வேலையில் ஈடுபட்டனர்,

இதனை அவதானித்த அப்பகுதி மக்கள்ஒன்று திரண்டு எதிர்ப்புத் தெரிவித்ததுடன் தாம் மீளக் குடியமரவுள்ள பகுதிகளில் படை முகாமை அமைக்க வேண்டாமென படையினருடன் முரண்டு பிடித்தனர்.

இதனால் படையினர் முகாம் அமைக்கும் தமது முயற்சியைக் கைவிட்டுத் திரும்பியதுடன், முகாம் அமைக்கப் படவிருந்த பிரதேசத்தில் மீளக் குடியமர்வதற்கிருந்த 17குடும்பத்திடமிருந்து மீளக்குடியமர்வை உறுதிப்படுத்தும் கடிதங்களையும் பெற்றுச் சென்றுள்ளனர்.

(த-77)

## சமாதானத்தை எதிர்க்க தேசிய கொள்கைக் குழுவை ஜே. வி. பி. அமைக்கும்

(கொழும்பு)

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சியினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மற்றும் விடுதலைப்புலிகள் தனிநாட்டுக் கோரிக்கை ஆகியன குறித்து ஆராய்வதற்கு அனைத்துக் கட்சிகள் அடங்கிய 'தேசிய கொள்கைக் குழு' ஒன்றை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அமைக்கவுள்ளது.

இது தொடர்பாக ஜே. வி. பி தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் தேசிய கொள்கைக் குழுவொன்றை இம்மாதம் 9 ஆம் திகதி அமைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபாலா சிறிசேனா, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தனா மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ம)

## கருத்தரங்கு

(துன்னாலை)

சேவாலங்கா மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை பி.ப 3:00 மணிக்கு கரவெட்டி கிழக்கு யாக்கரு விநாயகர் வித்தியாலயத்தில் சமூக வலுவூட்டல் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது. (உ-41)

## திலீபன் மருத்துவமனையில் தினமும் பெருமளவு நோயாளர் சிகிச்சை

(திருநெல்வேலி)

நெடுந்தீவுமத்தியில் அமைக்கப்பட்டுள்ள தியாகி திலீபன் மருத்துவமனையில் தினமும் பெருமளவு நோயாளர்கள் சிகிச்சைபெற்றுச் செல்கின்றனர்.

இப்பகுதி மக்கள் இவ்வைத்தியசாலை இயங்க ஆரம்பிக்கு முன்னர் மருத்துவசேவைகளைப்பெற மிகுந்த சிரமப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-43)

# கூட்டணியின் உட்பூசல்களுக்கு உயிர்கொடுக்கும் நேரம் இதுவல்ல

## செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன்உரை

(தென்மராட்சி)

இன்றைக்கு இந்த நாட்டில் தமிழர்கள் ஒற்றுமையாக நிற்கின்றார்கள். அந்த ஒற்றுமையை ஒருவராலும்குலைக்க முடியாது என்பதை நாம் நிரூபிக்க வேண்டும். இது எமது புனிதமான கடமை. நாங்கள் எமது கட்சியைப் பாதுகாக்க வேண்டும். வளர்க்க வேண்டும். கொள்கைகள் அடிப்படையில் நாம் உறுதியாக இருக்கவேண்டும். எம்மத்தியில் போட்டிக்குஇடமேயில்லை.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும், திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் யாழ். மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கட்சி ஆதரவாளர்கள் சந்திப்பில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நல்லூர் தொகுதிக் கிளைச்செயலாளர் பெ.கனகசபாபதி தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பாராளுமன்றஉறுப்பினர் நடராஜா ரவிராஜ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமகாராஜா, மாநகர முதல்வர் செ. கந்தையன், பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், சூ.சே. குலநாயகம் உட்படப் பலர் பங்கு பற்றியிருந்தனர்.

செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் எம்.பி. அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது தமிழர்களுடைய உரிமைப் போராட்ட வரலாற்றில் அதிமுக்கியமான காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மிகவும் பரந்துபட்ட நிலையில் நாம் சிந்திக்க வேண்டியவர்களாகவுள்ளோம். ஏனெனில் எமது உரிமைகளை நாம்பெற வேண்டும். அதற்குரிய அந்தஸ்தை நாம் இந்த நாட்டில் பெறவேண்டும். அரசியல் தீர்வைக்காண வேண்டிய நிலையில் நாம் இருப்போமாயிருந்தால் அது ஒரு திறமான தீர்வாக இருக்க வேண்டும். அதிகம் தாமதமில்லாமல் அத்தீர்வை நாம் பெறவேண்டும்.

மறுபடியும் யுத்தம் வெடிப்பதை நாம் விரும்பவில்லை. மறுபடி எமது மக்கள் பலியாவதையோ அல்லது எமது இளைஞர்கள் பலியாவதையோ நாம் நிச்சயமாக விரும்பவில்லை.

தமிழரசுக் கட்சியோ அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியோஎந்தக் காலகட்டத்திலும் ஒரு அரைகுறைத் தீர்வை ஏற்கத் தயாராக இருக்க வில்லை என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும்.

எம் மத்தியில்பிரிவினைக்கு இடமில்லைஎன்பதைத் தெளிவாக உணர வேண்டும். உணர்த்த வேண்டியது எமது கடமை. நாம் யாவரும் ஓர் அணியில் திரண்டு நின்று எமது இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காகப்பாடுபடவேண்டும் என்பது தான் சர்வதேச உலகின் நிலைப்பாடாகும். வட கிழக்கு மாகாணத்துக்கு பரிபூரண சுயாட்சி வழங்கப்பட வேண்டும். இதை நாம் பாதுகாக்க வேண்டும். வளர்க்க வேண்டும், கட்டியெழுப்ப வேண்டும்.

எமது கட்சிக்குள் சில பல பூசல்கள் இருக்கின்றன. எமது கட்சிக் கிளைகள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். எம்மத்தியில் இருக்கும் பிணக்குகளைத் தீர்த்து வாழவேண்டும். எமதுஇனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமெனப் போராடி வருகின்ற வேளையில் எம் மத்தியில் இருக்கின்ற பிணக்குகளுக்கு உயிர் கொடுக்க முற்படக்கூடாது எனக் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்திற்கு நூற்றுக் கணக்கான கட்சி ஆதரவாளர்கள் சமுகமளித்திருந்தனர். (உ-77)

## கிரிக்கெட் விதிகள் பற்றிய எழுத்துப் பரீட்சை

### விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம், புதிய மத்தியஸ்தர்களை உள்வாங்கும் நோக்குடன், வருடாந்தம் நடாத்திவரும் கிரிக்கெட் விதிகள் தொடர்பான எழுத்துப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சைக்கான முன்னோடி வகுப்புக்கள் நாளை 6 ஆம் திகதிஞாயிற்றுக்கிழமைமுதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் மு.ப10.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் செயலாளர் யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள்சங்கம், 424,1/1 கில்னர்லேன்என்ற முகவரியில் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக் கொள்ளலாம்,

என சங்கத்தின் செயலாளர் ம. அருள்குமரன்அறிவித்துள்ளார். (உ)

## இனந்தெரியாத நபர் சைக்கிளை விட்டுத் தப்பியோட்டம்

(காரைநகர்)

காரைநகர் சுவாமி அம்மன் கோவிலடிப் பகுதியில் உள்ள வீட்டு வளவு ஒன்றினுள் அதிகாலை வேளை நுழைந்ததாகக் கூறப்படும் அடையாளம் தெரியாத நபரைக் கண்டு குடும்பத்தவர்கள் கூக்குரலிடவே அந்நபர் தாம் வந்த சைக்கிளையும் விட்டுவிட்டுத் தப்பி ஓடியுள்ளார்.

தப்பி ஓடியஅந்நபர் ரீசேட்டும் அரைக்காற்சட்டையும் அணிந்திருந்ததாகக் கூறப்படுவதுடன் வீட்டு வளவினுள் இருந்து மீட்கப்பட்ட சைக்கிள் கடற்படையினரின் பாவனையிலுள்ள சைக்கிள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் காரைநகர் அரசியல் துறை அலுவலகத்திலும், கோவளம் கடற்படை அதிகாரியிடமும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனைத்தொடர்ந்துபிரஸ்தாப குடும்பத்தினர் நேற்று முன்தினம் பிற்பகல் கோவளம் கடற்படை முகாமுக்கு அழைக்கப்பட்டு கடற்படை அதிகாரியினால் விசாரணை நடத்தப்பட்டது.

(த-246)

## விவசாயிகள் கவலை

(கோப்பாய்)

கோப்பாய் மத்திப்பகுதியில் 1995 இல் அமைக்கப்பட்ட மண் அரண்கள் இது வரை அகற்றப் படாமையால் இவ் வருடமும் காலபோக நெற்செய்கையைஆரம்பிக்கமுடியாதுள்ளதாக விவசாயிகள் தரப்பில்கவலை தெரிவிக்கப் படுகின்றது.

வயல்வெளி ஊடாக வெள்ளம் பாய்ந்தோடும் வாய்க்கால்களும் இதன் குறுக்கே இராணுவ வேலிகளும் காணப்படுகின்றன.

இவ்வேலிகளுக்கிடைப்பட்ட பகுதிகளில் மிதிவெடிகள் காணப்படுவதாகவும் அச்சம் நிலவுகின்றது.

ஏற்கனவே இப் பகுதியில் பல கால்நடைகள் மிதிவெடியில் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-79)

# ஆபிரிக்க நாடுகளின் பஞ்சத்தின் கொடூரம்
# ஒன்றரைக் கோடி மக்கள பட்டினியால் அவதி

(கேப்டவுன்)

தென் ஆபிரிக்க நாடுகளில் அதிகரித்துவரும் பஞ்சத்தின் கொடுமையால் 15மில்லியன் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஐ.நா சபை கவலை வெளியிட்டுள்ளது.

தெற்கு ஆபிரிக்க நாடுகளில் குறிப்பாக லெசதோ, மாலாவி, மொஸாம்பிக், சுவஸ்லாந்து, ஸம்பியா, சிம்பாவே ஆகிய ஆறு நாடுகளில் 14.4மில்லியன் மக்கள் பட்டினியால் அவதிப்படுவதாக ஐ.நாசபை உணவுத் திட்ட அறிக்கை கூறுகின்றது.

கடந்த மேமாதத்தில் ஐ.நா சபை கணிப்பிட்டதன்படி 12.8 மில்லியன் மக்களே பட்டினியால் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் இந்தத் தொகை அதிகரித்திருப்பது பெரும் கவலை தருவதாக தெற்கு ஆபிரிக்க நாடுகளுக்கான சிறப்புத் தூதுவர் ஜேம்ஸ் மொரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறிப்பிட்ட 6 நாடுகளிலும் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படுபவர்கள் தொகையும் அதிகரித்து வருகிறது.

எயிட்ஸ் பாதிப்பினால் பெற்றோரை இழந்த அநாதைச் சிறுவர்களின் எண்ணிக்கை 4.2 மில்லியனாக உயர்வடைந்துள்ளது.

ஏற்கனவே பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள தென் ஆபிரிக்க நாடுகளிலுள்ளவர்களுக்கு எயிட்ஸ் நோயின் அதிகரிப்பு பல்வேறு சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

இங்கு எயிட்ஸினால் அதிகம் பாதிக்கப்படுவர்கள் இளைஞர்களாகவுள்ளனர். சுமார் 30மில்லியன் வளர்ந்த சிறுவர்கள் எயிட்ஸ் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

தென் ஆபிரிக்க கண்டத்திலுள்ள சில நாடுகளின் முகாமைத்துவத்துவமற்ற பொருளாதாரத் திட்டங்களே இதற்குக் காரணம என ஐ.நா சபை குற்றம் சாட்டியுள்ளது. (சு)



ஜம்மு அருகே பேருந்து ஒன்றில்சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் அதில் பயணம் செய்த இருவர் பலியானார்கள். மேலும் 21 பேர் காயமடைந்தனர். பேருந்தின் எரிபொருள் நிரப்பும் டாங்கி மீது வைத்திருந்த குண்டு வெடித்ததில் பேருந்து முழுவதும தீப்பற்றி எரிவதை படத்தில் காணலாம்.

# கியூபாவில் பெரும் சூறாவளி
# மக்கள் இடம்பெயர்வு

(ஹவானா)

கியூபாவின் மேற்குப் பிராந்தியத்தில் மணிக்கு 144கிலோமீற்றர் வேகத்தில் வீசிய சூறாவளி காரணமாக மரங்கள் சரிந்து விழுந்தது டன் பல வீடுகளும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

வீடுகிளின் கூரைகளும், மின்சாரக் கம்பங்களும் பெருமளவில் சேதம்அடைந்துள்ளன. இதையடுத்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிலி எனப்பெயர் இடப்பட்டுள்ள புயல்காற்று தற்போது மெக்சிக்கோ குடாக்கடல் பகுதியை நோக்கி நகர்ந்துள்ளது.

இப்புயலககாற்று அமெரிக்காவைத் தாக்க முன்னர் கிரேபிய தீவுகளில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியதோடு 7பேரைப்பலி கொண்டமையும் குறிப்பிடத்தக்கது

இதன் காரணமாக, நாஸா அமைப்பானது அதன் 'சட்லான்டா' செய்மதியை விண்ணுக்கு ஏவியதை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

குறுகிய காலப்பகுதியில் கியூபா இரண்டாம் முறையாக சூறாவளியால் தாக்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (சு)

# யஸீர் அரபாத்தின் தலைமையகத்தை இஸ்ரேலியத் துருப்புக்கள் மீண்டும் சுற்றிவளைப்பு

(ரெல்அவிவ்)

ளபலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத் தின் தலைமையகத்தை மீண்டும் இஸ்ரேலியத் துருப்புக்கள் சுற்றி வளைத்துள்ளன.

அரபாத்தின் கட்டடத்தில் மறைந்துள்ள 50 தீவிரவாதிகளையும் ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்த இஸ்ரேலியத் துருப்புக்கள் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களுக்கு காரணமான அந்த 50 பேரையும் கைது செய்யாது வாபஸ் பெறப போவதில்லை எனக் கூறிவந்தது.

இஸ்ரேலியத் துருப்புக்கள் வாபஸ் பெற்றதினால் அரபாத்தின் தலைமையகத்தைச் சுற்றி வளைப்பதில் ஈடுபட்டுள்ளன.

முகமூடியணிந்த இஸ்ரேலியத் துருப்புக்கள் இஸ்ரேலில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களுக்குக் காரணமான தீவிரவாதிகளைத் தேடும் பணியில்மீண்டும்ஈடுபட்டுள்ளன. (சு)

# பாகிஸ்தான் பொதுத தேர்தலில் பெனாஸிருக்கு வெற்றி வாய்ப்பு
## கருத்துக் கணிப்பு தகவல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தேர்தலில் பெனாஸிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி வெற்றி பெறும் சந்தர்ப்பம் இருப்பதாக கருத்துக் கணிப்புக் கூறுகிறது.

பாகிஸ்தானில் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி, நவாஷ் செரீப் தலைமையிலான முஸ்லீம் லீக், ஜனாதிபதி முஷாரப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக், ஆகிய கட்சிகள் தேர்தலில் குதித்துள்ளன.

மேற்படி தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பு எந்தக் கட்சிக்கு உள்ளது எனச் செய்தி நிறுவனமொன்று இணையத்தளத்தின் மூலம் கருத்துக் கணிப்பு நடத்தியுள்ளளது.

இக்கருத்துக் கணிப்பின் மூலம் பாகிஸ்தான் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதியான பெனாஸிர் பூட்டோவின் கட்சியே வெற்றிபெறும் என்று தெரியவருகிறது. (சு-4)

WORLD NEWS உலக தரிசனம்

## சர்வதேச நாணய நிதியத் தலைமையகத்தில் மர்மத் தபால்

(வாஷிங்டன்)

வாஷிங்டனில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தலைமையகத்தில் சந்தேகத்திற்கு இடமான மர்மத்தபால் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு வேலை செய்தவர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

மேற்படி தபாலுறையினுள் இருந்த தூள் நிலத்தில் கொட்டப்பட்டதாகவும் இத்தூள் அந்திரெக்ஸ் தூளாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. (சு-4)

## இந்தியாவுக்குள் மர்ம விமானம் நுழைவு

இந்தியாவில் இனங்காண முடியாத மர்ம விமானம் ஒன்று இந்தியாவின் எல்லைக்குள் நுழைந்து இரண்டு பொதிகளைப் போட்டு விட்டுச் சென்றுள்ளது.

இப்பொதிகள் கடற்பகுதிக்குள் விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து இந்திய விமானப்படை விமானிகள் மேலதிக விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

# ஜப்பான் நாகஸாகியின் கட்டுமானத்தளத்தில் ஆடம்பரக்கப்பல் தீப்பற்றியது

(டோக்கியோ)

ஜப்பான் நாகஸாகி கப்பல் கட்டும் தளத்தில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த ஆடம்பரப் பயணிகள் கப்பலில் தீப்பற்றிக் கொண்டது.

கப்பல் தீப்பிடிக்கும் போது அங்கு ஆயிரம் வேலையாட்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலின் முன் பகுதி இன்னும் எரிந்து கொண்டு இருக்கிறது என்றும், தீயை அணைக்க எவ்வளவு காலம் செல்லும் என்பதை திட்டவட்டமாக அறிவிக்க முடியாது என்றும் கப்பல்கட்டும் தளத்தின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

3ஆயிரத்து 100பேர் பயணம் செய்யக் கூடியதாக, பிரித்தானியாவுக்கென நிர்மாணிக்கப்பட்டு வந்த இந்த ஆடம்பரக் கப்பல் இன்னும் ஓரிரு மாதங்களில் வெள்ளோட்டம் விடப்பட இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (சு)

# பாகிஸ்தானின் உளவாளிகள் 27பேர் இந்தியாவில் கைது

(புதுடில்லி)

இந்தியாவிலிருந்து படை இரகசியங்களை பாகிஸ்தானுக்கு அனுப்பும உளவுத் துறையினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் படை இரகசியங்களை பாகிஸ்தானின் இராணுவத்திற்கு தெரிவிக்கும் உளவுத் துறையினர் என்ற சந்தேகத்தின் பேரில் 27பேரை நேற்று முன்தினம் பொ்லிஸார் கைது செய்துள்ளதாக அறியப்பட்டுள்ளது.

அண்மையில் கைதான பாகிஸ்தான் உளவுத்துறைத் தலைவரான நஷ்ரூல் பொலிஸாருக்கு வழங்கிய தகவல்களை அடுத்தே மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பக்தாத்திலஉள்ள உளவு அமைப்பு மூலமாகவே தான் இந்தியா சென்றதாகவும் தனக்கு படை இரகசியங்களை வழங்கிய படை அதிகாரகளின் பெயர்களையும் இவர் பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

# புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய டாக்டர் தாயப்பன் தமிழகப் பொலிஸாரால்கைது

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக்கருத்துத் தெரிவித்தமைக்காக டாக்டர் தாயப்பன் பொடோ சட்டத்தின் கீழ் தமிழ் நாட்டுப் பொலிஸாரால் கைது செய்ப்பட்டுள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் டாக்டர் தாயப்பன் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக உரையாற்றினார் என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை தாயப்பனின் வீட்டை பொலிஸார் கடுஞ் சோதனை நடத்திய பின்னர் அவர் கைதானார் என தகவல்கள்வெளியாகி உள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டமைக்காக டாக்டர் தாயப்பனோடு 13பேர் தமிழ் நாட்டில் பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வெவ்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு-4)





கியூபாவின் ஹவானா நகரின் மேற்குப் பிராந்தியத்தில் மணிக்கு 144கிலோமீற்றர் வேகத்தில் வீசிய சூறாவளிக்காற்றினால் மின்கம்பம் ஒன்று தொங்கி நிற்பதையும் பினால்டேல் ரியோவில் பலத்த காற்றுடன் மழைபெய்து வருவதையும் படங்களில் காணலாம்

## காஷ்மீரில் ஒருவர் பலி இருவர் படுகாயம்

(காஷ்மீர்)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

காஷ்மீரின் கத்துவா மாவட்டத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் அந்த மாவட்ட பொலிஸ் ஆணையாளர் எட்வன்சிங் கொல்லப்பட்டதுடன் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை, பாகிஸ்தானின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள காஷ்மீரிலிருந்து குஜ் மாவட்டத்திற்குள் நுழைய முற்பட்ட 7 தீவிரவாதிகளையும் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர். (சு-4)

# இன்று ஒரு தகவல்

## பயம் ஆறுவகையாகும்!

'எதிர்காலத்தை நினைத்தல் எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது சார்!' என்று சொல்கிறவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். பயப்படாத மனிதர்கள் யாருமே கிடையாது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயம். இருந்தாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது மனிதனுக்கு ஆறு விதமான பய உணர்வுகள் வரலாம் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். எல்லாவிதமான பயமும் இந்த ஆறுவகைக்குள்ளே அடக்கம். அந்த ஆறுவகைப் பயமும் ஆறு எதிரிகள் மாதிரி. ஆறு எதிரிகளையும் புரிந்து கொண்டால்போதும். வாழ்க்கையில் சுலபமாக வெற்றியடைய முடியும்.

சரி அந்த ஆறுவகைப்பயம் எவை எவை? முதலில்வறுமை பற்றிய பயம், இரண்டாவது பழிச்சொல்பற்றிய பயம், மூன்றாவது- உடல் நலம் பாதிப்பு பற்றியபயம், நான்காவது-காதல்தோல்வி,ஐந்தாவது-முதுமை, ஆறாவது-மரணம், பயப்படுவதுஎன்பது ஒரு மனநிலைதான் இந்த மனநிலையைக் கட்டுப்படுத்த முடியும். திசைதிருப்ப முடியும்.

சரி! இந்தப் பயங்களின் அறிகுறிகள் எப்படி இருக்கும்? வறுமை பற்றிய பயம்என்று முதலில் சொன்னோம் அல்லவா? அந்தப்பயத்தின் அறிகுறிகளைத் தெரிந்து கொள்வோம் எதிலேயும் அக்கறை இல்லாமல் இருப்பது, ஒரு குறிக்கோள் இல்லாமல்இருப்பது, வறுமையைச் சகித்துக் கொள்வது, வாழ்க்கையில் கிடைப்பது எதுவாக இருந்தாலும் ஆட்சேபனை இல்லாமல் ஏற்றுக்கொள்வது, மனதாலும், உடலாலும், சோர்ந்துபோய் இருப்பது ஆர்வம், முனைப்பு, கற்பனைத்திறன் எதுவுமே இல்லாமல் இருப்பது, இவையெல்லாம் வறுமைபற்றிய பயத்தின் அறிகுறிகள்.

அடுத்தது-பழிச்சொல் பற்றிய பயம், அதாவது அடுத்தவர்கள் நம்மைக் குறை சொல்லி விடுவார்களோ என்கின்ற பயம். இதற்கு அறிகுறி என்ன தெரியுமா? புதியவர்களைச் சந்திக்கப் பயப்படுவது, முடிவு எடுக்க முடியாமல் குழப்புவது பிரச்சினைகளைத் தவிர்க்கவிரும்புவது, தாழ்வு மனப்பான்மை வரவுக்குமீறி செலவு செய்து இமேஜை உயர்த்துவது, குறிக்கோள் இல்லாத வாழ்க்கை இவையெல்லாம் அதற்கு அறிகுறிகள்.

மூன்றாவது பயம் - உடல் நலம் பாதிப்புப்பற்றிய பயம். அதாவது நோய்பற்றிய பயம். ஓர் உண்மை என்னதெரியுமா? டாக்டரை சந்திக்கிற மனிதர்களில் 75 சதவீதம் பேர் தங்களுக்கு நோய் வந்துவிட்டது என்கிற கற்பனையில் இருக்கிறவர்கள்தானாம். இந்தப் பயத்தின் அறிகுறிகள் எவை தெரியுமா?வியாதிக்கான அறிகுறிகள் தன்னிடம் இருப்பதாக நினைத்துக் கொள்வது. எந்த நேரமும் வியாதியைப் பற்றியே பேசிப்பேசி மனதை அங்கேயே வைத்திருப்பது, நோய் சம்பந்தமான செய்திகளைப் படித்து நமக்கு இப்படி ஆகிவிடுமோ என்று வேதனைப் படுவது இவைகள்தான் அறிகுறிகள்.

நான்காவது பயம்- காதல் தோல்வி பற்றிய பயம். இது மிகவும் வேதனையானது, உடம்பையும், மனதையும் சீரழித்துவிடும். ஆண்களை விடப் பெண்கள்தான் இந்தப் பய உணர்வில் அதிகமாகப் பாதிக்கப்படுகிறவர்கள்.

ஐந்தாவது முதுமை பற்றிய பயம். வயதான காலத்தில் எப்படிச் சமாளிப்பது! சுதந்திரமாக-சுயமாகச் செயல்பட முடியாதே என்கிறநினைப்பு. ஆறாவது மரண பயம்-இது எல்லாருக்கும்பொதுவானது. தவிர்க்கமுடியாதது. எனவே இதனை ஏற்றுக்கொள்கிற மனப்பக்குவம் வேண்டும்.

இன்றைய இளைஞர்கள் இந்த ஆறுவகைப் பயங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். சரியாகப் புரிந்து கொள்கிறபோது பயமும் தானாக விலகிச் சென்றுவிடும். வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு இந்தப் பயங்கள் முட்டுக்கட்டையாக ஆகிவிடக் கூடாது. உழைத்துப் பணம் சேர்க்க வேண்டும். உற்சாகமாக மனதை வைத்துக் கொள்ளவேண்டும்.

மனதைக் கட்டுப்படுத்துகிற மார்க்கம் தெரிந்து கொண்டால் போதும். எல்லாம் சரியாக வந்துவிடும். நமது ஆள் ஒருவன் சொன்னான், 'சார்!எனக்குவறுமை பற்றிய பயம்தான் இருந்தது. ஒரே இரவில் முப்பதாயிரம் ரூபாய் தயார் பண்ணிவிட்டேன் இப்போது எனக்கு இன்னொரு பயம் வந்து விட்டது. 'என்ன பயம்'? பொலிஸ் கண்டு பிடித்து விடுமோ-என்கிற பயம்!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

படையினரை விடுவிக்கக் கோரி

# பெரும்பான்மை இன மக்கள் உண்ணாவிரதம்

(திருமலை)

விடுதலைப் புலிகளினால் கடந்தமாதம் 25 ஆம் திகதி கைது செய்யப்பட்ட ஆறு இராணுவத்தினரையும் உடனடியாக விடுவிக்கக் கோரி பெரும்பான்மை இன மக்கள் சுழற்சி முறையிலான உண்ணா விரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்

திருமலை மணிக்கூட்டுக் கோபுரத்தை சூழவுள்ள ஏகாம்பரம வீதி, மத்தியூஸ் வீதி, கடற்படைத்தள வீதி ஆகியவற்றை போக்குவரத்துக்கு தடைசெய்து உண்ண விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உண்ணா விரதிகள் 'நாட்டைப்பிரிக்கவந்தநோர்வேயே நாட்டை விட்டு வெளியேறு' பான்ற சுலோகங்களைத் ரோங்கிய வண்ணம் காணப்படுகின்றனர்.

இதேவேளை உண்ணா விரதமிருக்கும் பகுதிக்குப் பொலிஸார் பலத்த பாதுகாப்பு வழங்கியுள்ளனர். (ம)

ப

களவாடப்பட்ட

# மோட்டார் சைக்கிள் மீட்பு

(கோப்பாய்)

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளை, களவாடப்பட்ட அப்பாடசாலை ஆசிரியை ஒருவரின் மோட்டார் சைக்கிள் கள்வர் வசமிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

(உ-79)

# ஜனாதிபதி சந்திரிகா; பிரதமர் மீது ஊழல் குற்றம் சுமத்தவில்லை

### ஊடகங்கள் புரிந்த ஊழல் என்கிறது ஜனாதிபதி செயலகம்

(கொழும்பு)

பிள்ளைகளை கொழும்பு றோயல் கல்லூரியில் அனுமதிப்பதற்கு இடைத்தரகர் மூலமாக பிரதமர் லஞ்சம் வாங்கியிருந்தார் என்று ஜனாதிபதி குமாரதுங்க கூறியிருந்ததாக வெளி வந்த செய்திகள் தவறானவை என்று ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

அனுராதபுரத்தில் ஜனாதிபதி நிகழ்த்திய உரையில், சிறுவர்களை பாடசாலைகளில் சேர்ப்பதில் உள்ள குறைகளை ஒரு தாய் என்ற வகையில் எடுத்துக் கூறியதாகவும்,

குறிப்பிட்ட ஒரு காலத்தில் றோயல் கல்லூரியில் பிள்ளைகளை சேர்ப்பதற்கு 25 ஆயிரம் ரூபா லஞ்சம் பெறப்பட்டு வந்ததாகவும்,

தான் அவ்வாறாக லஞ்சம் கொடுக்காததால் தனதுமகன் பாடசாலையில் சேரவில்லையென்று மட்டுமே கூறியிருந்ததாகவும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள மறுப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட முறையில் பிரதமரை குறிக்கும் படியாக ஜனாதிபதி எதுவும் பேசியதில்லையென்று அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளுமே உண்மையைத் திரித்து வெளியிட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

(உ)

## இராசி பலன்

5. 10. 2002
(புரட்டாதி 19, சனி)
சதுர்த்தசி மு.இ. 8 07 வரை
உத்தரம் பி.இ. 3.03 வரை
இராகு காலம் 9.02 - 10.32
நல்ல நேரம்-3.02-4.32
புரட்டாதிச் சனி

**மேடம்**

காரியம் கைகூடும்,தொழில் விருத்தி,உடல் ஆரோக்கியம் சுவாரஸ்யம்.

**இடபம்**

வியாபார நன்மை, ரோக பயம், குடும்பக் கவலை, முயற்சி தாமதம்.

**மிதுனம்**

மனச்சஞ்சலம், வாகன பயம், தாய்வழி உறவு, கல்வியில் ஆர்வம்.

**கடகம்**

வாக்கு மேன்மை, காரிய அனுகூலம்,பொருள்சேர்க்கை அன்னியர் உதவி.

**சிங்கம்**

கற்பனை மிகுதி, வாக்குக் கலகம் தன விரயம், போசன சுகம்.

**கன்னி**

ஆழ்ந்தசிந்தை, சயன சுகம், நல்ல முயற்சி, தெய்வானுகூலம்.

**துலாம்**

உணர்ச்சி வசப்படல், பிரயாணக்கஷ்டம், உறவினர் வெறுப்பு, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**

எடுத்த காரியம் கைகூடும், தனலாபம்,உறவினர்வருகை, தொழில் நன்மை.

**தனுசு**

அதிகாரம், நல்ல நிகழ்ச்சி, தூர தேசச் செய்தி, காரிய அனுகூலம்.

**மகரம்**

புதிய திட்டமிடல், உடல் வியாதி, திடீர் பயணம், முயற்சி தாமதம்.

**கும்பம்**

பெரியோர் மனஸ்தாபம், வேலைக் கஷ்டம், காரிய தடங்கல், பிரயாண பயம்.

**மீனம்**

குடும்ப சுகம், தனலாபம், இலட்சிமீகரம், காரிய அனுகூலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# கூட்டணி உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்ப சம்பந்தனிடம் கோரிக்கை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாநகரசபையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்களுக்கு வெற்றிடமாக இருக்கின்ற இடங்களுக்கு உரியவர்களை நியமனம் செய்யுமாறு மாநகரசபைமுதல்வர் செ, கந்தையன்கூட்டணியின் செயலாளர் நாயகம்இரா.சம்பந்தன்எம் பியிடம் நேரில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மாநகர சபை முதல்வர் செயலாளர் நாயகத்திடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளார். (உ-77)

# மகளிர் தினத்தை ஒட்டி 24 மணிநேரமும் ஏ-9 பாதையை திறக்கமுயற்சி

(வவுனியா)

இம்மாதம்10ஆம்திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ள மகளிர் தின எழுச்சி விழாவையும்,லெப்டினன்ட் மாலதியின் 15 வது நினைவு தினத்தையும் முன்னிட்டு ஓமந்தை, முகமாலை சோதனைச்சாவடிகளை24 மணிநேரமும்திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை மேற்கொண்டுள்ளது.

24 மணிநேரமும் பாதையைத்திறப்பது தொடர்பாக இராணுவத்தினருடனும்சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருடனும் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை தொடர்பு கொண்டுள்ளது,

இவ்விழாவிற்கு, யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்புமற்றும்தென்னிலங்கையில் இருந்து பெருந்திரளான மக்கள் வருவார்கள் என்று எதிர்பார்ப்பதை அடுத்தே 24 மணிநேரமும் பாதைதிறப்புக்கான ஏற்பாடு நடைபெறுகின்றது. (ம)

# மிதிவண்டி உரிமத் தகடு பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபைஎல்லைக்குட்பட்ட மிதிவண்டி உரிமையாளர்களை தத்தம் மிதிவண்டிக்குரிய 2002 ஆம் ஆண்டிற்கான உரிமத்தகட்டினை இம்மாதம் 10 ஆம் திகதிக்கிடையில் யாழ் மாநகரசபை வருமானக் கிளையில் உரியபணத்தினை செலுத்தி பெற்றுக்கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் வீதிகளில் வைத்து வருமானப் பரிசோதகர்கள் மூலம் உரிமத்தகட்டினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாநகரஆணையாளர் அறிவித்துள்ளார். (உ

# சர்வதேச மன்னிப்புச் சபை பாராளுமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாம்

(யாழ்ப்பாணம்)

1996 ம் ஆண்டு படையினரால் கைது செய்யப்பட்டு, காணாமல் போனவர்கள் தொடர்பாக, சர்வதேச மன்னிப்புச்சபை பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அத்துடன் காணாமல் போனோர் சம்பந்தமாக பத்துத்தடவைகளுக்குமேல் பாராளுமன்றத்தில் பேசப்பட்டுள்ளது. ஆனாலும் காணாமல்போனவர்கள் படை முகாம்களிலும் சிறைகளிலும் இருப்பதாக தெரிவிப்பது எந்தளவுக்கு ஆக்கபூர்வமானதாக இருக்குமென்று தெரியாதென, பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ் செயலகத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்:

காணாமல் போனவர்கள் தொடர்பாக அறிவதற்காக வெளிநாட்டு நிபுணர்கள் அழைக்கப்பட்டு, விசாரணைகள் நடத்தப்பட்டன. எனினும் திருப்தியான முடிவுகள் எதுவும் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணம் வந்திருக்கும் இக்குழு, கொழும்பு சென்றவுடன் அங்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மற்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆகியோரைச் சந்தித்து, காணாமல் போனவர்களின் நிலைமை குறித்து ஆராயவுள்ளது.

அத்துடன் படைமுகாம்களில், சிறைக்கூடங்களில் காணாமல் போனவர்கள் இருக்கின்றார்களா என தீவிரமாக தேடுதலில் ஈடுபடவுள்ளதாகவும் சம்பந்தன் தெரிவித்தார்:

தேடுதல் நடவடிக்கைக்கு பின்னரும்கூட காணாமல் போனவர்கள் தொடர்பாக எதுவித தகவலும் கிடைக்கவில்லையெனில், அடுத்த கட்டமாக அவர்களுக்கான, நஷ்டஈடு சம்பந்தமாக ஆராயவுள்ளதாகவும்,

காணாமல் போனவர்கள் தொடர்பாக குற்றமிழைத்தவர்களுக்கு அரசாங்கம் தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தப்போவதாகவும், சம்பந்தன் உறுதியளித்தார் (இ-6)

## நாட்டின் தலைவி என்பதை மறந்து செயற்படும்

# ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

### அமைச்சரவை ஆராய்கிறதாம்

## அமைச்சர் லொக்கு பண்டார தகவல்

(கொழும்பு)

**வாராந்தம் நடை பெற்று வரும் அமைச்சரவைக் கூட்டங்களுக்கு ஜனாதிபதி சந்திரிகாபண்டார நாயக்கா குமாரதுங்க சமுகமளிக்கத் தவறுவதால் அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை கொண்டுவருவது தொடர்பாக அமைச்சரவை ஆராய்ந்து வருகின்றது.**

பாராளுமன்ற சபை முதல்வரும்,நீதி,சட்ட சீரமைப்பு இன ஒருமைப்பாட்டு, புத்த சாசன அமைச்சருமான வி. ஜ. மு. லொக்குபண்டார லண்டன் பி. பி. ஸி செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து பேட்டியளிக்கையில்; நாட்டின் தலைவி என்ற ரீதியில் தமது கடமையை அவர் ஒழுங்காக ஆற்றத் தவறிவிட்டார்.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது, பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம்பதவிக்கு வந்துள்ளது. தவிரவும் ஜனாதிபதியின் அனுசரணையுடன் அரசாங்கம் அதிகாரத்துக்கு வரவில்லை.

ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரங்கள் போலவே, அரசுக்கும் அரசியல் யாப்பு மூலமான அதிகாரங்கள் உள்ளன. எனவே, நாட்டு மக்களின் எதிர்காலம் குறித்தும், அவர்களின் நன்மை கருதியும் இருதரப்பினரும் ஒற்றுமையுடன் செயற்பட்டால் அது உகந்ததாக இருக்கும்.

இவ் விருதரப்பினரும் இணைந்து பணியாற்றினால், நாட்டின் சகல துறைகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைய முடியும். சமாதான நடவடிக்கைகளும் மேலும் வலுவடையும்.

இதேவேளை, ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடிய வகையில் இருபக்கப் பிரதிநிதிகளான, அமைச்சர் மிலிந்த மொறகொட, பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் பேச்சுவார்த்தைகளை நடத்திவருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

### உப தபாலகங்கள் உரிய இடத்தில் இயங்குகின்றன

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பருத்தித்துறையிலும் வன்னியிலும் இயங்கி வந்த தாளையடி மற்றும் செம்பியன் பற்றுப்பகுதிகளுக்கான உப தபால் நிலையங்கள் கடந்த முதலாம்திகதி முதல்உரியஇடங்களில் இயங்க ஆரம்பித்துள்ளன.

தாளையடி உபதாபல்நிலையத்தை வவுனியாதபால்அத்தியட்சகரும் செம்பியன்பற்று உபதபாலகத்தை வடமராட்சி உதவி அரசாங்க அதிபரும் மீளத் திறந்து வைத்தனர். (உ-43)

## இன்று 12 வேங்கைகளின் 15வது நினைவு தினம்

(மந்திகை)

குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 15 வது ஆண்டு அஞ்சலி நிகழ்வு இன்று வல்வெட்டித்துறை தீருவிலில் உள்ள நினைவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் இலங்கைக் கடற்படையினரால் வல்வெட்டித்துறைக் கடலில் வைத்து கைது செய்யப்பட்டு கொழும்பு கொண்டு செல்ல முற்பட்ட வேளை பலாலியில் வைத்து சயனைட் அருந்தி இவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-23-6)

## மின் விநியோகத்தை விஸ்தரிக்க கோரிக்கை

(காரைநகர்)

காரைநகர்ப் பகுதிக்கான மின் விநியோக நேரத்தினை அதிகரிக்குமாறு அப்பகுதி மக்கள் இலங்கை மின்சாரசபை சித்தன்கேணிஉப அலுவலகத்தைக் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மகஜர்ஒன்றினையும் அனுப்பி வைத்துள்ளனர்.

தற்போது இரவு 7.00 மணி தொடக்கம் 11.00 மணிவரையும் அதிகாலை 4.30 தொடக்கம் 6.30 மணிவரையும் மின் சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. மழைக்காலம் ஆகையினால், மாலை 6.00 மணி தொடக்கம் அதிகாலை 7.00 மணிவரைக்கும் மின் விநியோக நேரத்தினை நீடிக்க வேண்டும்என அதில் கோரப்பட்டுள்ளது. (உ-246)

## எதிர்க் கட்சிகள் பொது இணக்கப்பாடு

(கொழும்பு)

அரசாங்கத்தின் தனியார் மயப்படுத்தலுக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அனைத்து எதிர்க்கட்சிகளின் அமைப்பும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷதெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

இதேவேளை அனைத்து எதிர்கட்சிகளின் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் இணைந்து எதிர்வரும் 8ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை கொழும்பில் தனியார் மயப்படுத்தலைஎதிர்த்துஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகவும்எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷஅறிவித்துள்ளார். இதேவேளை இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அரச நிறுவனங்களையும் தனியார்மயப்படுத்துவதற்கு அரசாங்கம் தயாராகி உள்ளதாக நேற்று முன்தினம் கொழும்பில்நடைபெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில் எதிர்கட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

அதுஇவ்விதமிருக்க, தனியார் மயப்படுத்தலுக்கு எதிராக விடுதலைப்புலிகளும் எம்முடன்இணைந்துகொள்ளமுடியுமாயின் அதற்கு தடையில்லை என்றும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தேசிய அமைப்பாளர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (உ-7)

## சத்திர சிகிச்சைப் பிரிவு செயலிழப்பு

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவில் சத்திர சிகிச்சை நிபுணர் இல்லாமையால் நோயாளர்களை யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எம். எஸ். எவ். வைத்திய நிபுணர் விடுமுறையில் சென்றதை அடுத்து அவரது இடத்திற்கு ஒருவர் நியமிக்கப்படாமையாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-23)

## 10 ஆம் திகதிமுதல் சாவகச்சேரி நகரசபை சொந்த இடத்தில் இயங்கும்

(தென்மராட்சி)

தற்போது மீசாலையில் இயங்கி வரும் சாவகச்சேரி நகரசபை எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் அதன் பழைய இடத்தில் இயங்கவுள்ளது.

தென்மராட்சியில் 2000ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வைத் தொடர்ந்து சாவகச்சேரி நகரசபை சுமார் இருவருடங்கள் நெல்லியடியில் இயங்கி, இவ்வருடம் மாசி முதல் மீசாலையில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரிப் பொதுச்சந்தை நிர்வாகத்தினை இம்மாதம் முதலாம் திகதி முதல் பொறுப்பேற்றுள்ளது என அறியப்படுகின்றது. (உ-77)

## பேருந்து மோதியதில் மாணவர்கள் பலி

(கொழும்பு)

றாஹமமாபாகே மத்தும கல பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர்.

போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியொன்று மோதியதனாலேயே இவ்விருமாணவர்களும் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவத்தைதொடர்ந்து அப்பிரதேச வாசிகள் கலவரத்தில் ஈடுபட்டதாகவும், அதனைத் தடுக்கும் பணியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அவர்கள் கலவரத்தில் ஈடுபட்ட 15பேரை கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பந்தப்பட்ட வாகனத்தின் சாரதி கந்தானை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (உ-8)

# தேசிய வீரர்கள் பங்கேற்கும் நட்சத்திரக் கிரிக்கெட் ஆட்டம்

## சிலிங்கோ நிறுவன ஏற்பாட்டில் யாழில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் முக்கிய வீரர்கள் பங்கு கொள்ளும் நட்சத்திரக் கிரிக்கெட் ஆட்டம் இம்மாதம் 15 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் அணியுடன் விளையாடவிருக்கும் சிலிங்கோ நிறுவன கிரிக்கெட் அணியில் இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் சனத் ஜெயசூர்யா, சமிந்த வாஸ், டி. ஆர். பெர்னாண்டோ, மஹேல ஜயவர்த்தனா, குமாரசங்ககார, மாவன் அத்தப்பத்து ஆகியோர் அங்கம் வகிக்கவுள்ளனர்.

சிலிங்கோ ரவல்ஸ் அன் ரூர்ஸ் லிமிடெட் நிறுவன பணிப்பாளர் ரவி டீ சில்வா நேற்று முன் தினம் மாலை யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத் தகவலை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா எயர் லைன் பயணச்சீட்டு விற்பனை முகாமையாளர்இன்ஷாநொட்டிக்கோ, கிளை முகாமையாளர் டி.மனோகரன், செலான் வங்கி யாழ். கிளை முகாமையாளர் கே. கனகசிங்கம் உட்பட அதிகாரிகள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

இலங்கையிலே அதிகம் பேர் கிரிக்கெட் விளையாட்டை ரசித்து வருகின்றனர். குறிப்பாக யாழ்ப்பாணத்திலே அதிகூடிய இளைஞர்களும், யுவதிகளும் கிரிக்கெட் மீது அபிமானம் கொண்டிருப்பதை நாம் அவதானித்து, சர்வதேச கிரிக்கெட் வீரர்களையும் யாழ்ப்பாணம் அழைத்துவர முடிவு செய்தோம்.

நாம் எமது பணிமனையை யாழ்ப்பாணத்தில் அன்றய தினம் திறப்பதால் அதன் ஞாபகார்த்தமாக இருபது பந்துப்பரிமாற்றம் கொண்ட கிரிக்கெட் போட்டிக்கு ஏற்பாடு செய்துள்ளோம்,

அன்றைய தினம் டயலொக் தொலைபேசிக்கான புதிய இணைப்பும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

எமது நிறுவனம் குடா நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்காக சிலிங்கோ ரவல்ஸ் அன் ரூர்ஸ் நிறுவனக் கிளையை ஆரம்பிக்கவுள்ளது. நமது நிறுவனம் ஸ்ரீலங்கா எயர் லைன்ஸ், லயன் எயர் உட்பட சகல விமான டிக்கெட்டுக்களையும் விற்பனை செய்யும் நிறுவனமாகும். யாழ்ப்பாண மக்கள் எமது நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு வெளிநாட்டுப் பயணங்களை இலகுவாக்க சகல வசதிகளையும் நாம் செய்து கொடுப்போம் என உறுதி வழங்குகின்றோம். சிலிங்கோ நிறுவனம் ஒன்றுதான் இலங்கையில் வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் ஒரே குடையின் கீழ் பெறக் கூடிய நிறுவன்மாகச் செயற்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார். (உ-3)

# போர்க்கால சிந்தனைகள் புனர்நிர்மாண கட்டமைப்புக்கு ஏற்றவாறு மாறவேண்டும்

**செப். 29 ஆம் திகதி "வலம்புரி" இதழில் ஒஸ்லோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சண்முகரத்தினம் அவர்களின் கருத்தை வெளியிட்டோம். அவர் பேசிய பின் நிகழ்ந்த கலந்துரை யாடலில் பங்குபற்றிய பொறியியலாளரும் அறிஞருமான நல்லூர் தில்லைநாதன் அவர்கள் வழங்கிய கருத்துரை மிகப் பயனுடையது. அதனைக்கேட்ட ஒருவரின் மனப் பதிவுகளை இங்கு தருகிறோம். (ஆ-ர்)**

யாழ் பல்கலைக்கழகப் புவியியல மண்டபத்தில் நிகழ்ந்த கருத்தரங்கில் உரையாற்றிய பேரறிஞரைத் தொடர்ந்து பேராசிரியர்கள் சிற்றம்பலம், சிவச்சந் திரன், எழுத்தாளர் சாந்தன் போன்றோரின் கருத்துக்கள் வழங்கப்பட்டன அனுபவம் மிக்க பொறியியலாளரும், அறிவுசார் உலகில் முதலிடம் வகிக்கும் புத்தகங் களைத் தொகுத்து அனைவருக்கும் வழங்கிவருபவருமான பெரியார் தில்லை நாதன் அன்று சொன்ன கருத்துக்கள் இன்றைய தமிழீழத்தினர் அனைவரை யும் சிந்திக்க வைப்பவை.

## அழிவுகளைப் பார்த்து அனுதாபம்

சுமார் இரண்டு சகாப்தங்கள் பின் நிற்கிறோம்; தெற்கு வாழ்கிறது; வடக் குத் தேய்ந்துவிட்டது என எல்லாரும் கூக்குரல் எழுப்புகிறார்கள். போரினைச் சாக்கிட்டு அறிவுசார் கூட்டம் ஒதுங்கி வாழ்ந்தது; அல்லது புலம் பெயர்ந்து ஓடியது. இன்று சிறிது மூச்சு விடலாம் போலிருப்பதால், இடைக்கிடை படித் தவர்கள் தம் குரலை உயர்த்துகிறார் கள். அமைச்சர்கள், உயர்மட்டத்தினர், அனைத்துலக அரசியற் சார்புள்ள, சார்பற்ற குழுக்கள் எல்லாம் மிருகக் காட்சிச்சாலையைப் பார்த்துப்போகும் மனிதர் கூட்டம்போல யாழ்ப்பாண அழிவு களைப் பார்வையிட்டு அனுதாப வார்த்தை ஒன்றிரண்டைச் சொல்லி விட்டுப் போகிறார்கள். சாதாரண மக்க ளுடைய வாழ்வின் விடிவுக்கு எதுவுமே நடக்கவில்லை. மறுபுறம் வெளிநாட்டி லிருந்து சிலருக்குக் கிடைக்கும் பணத் தைப் பறிக்க, விளம்பரம் என்ற ஆயுதத்துடன் வணிகர் கூட்டம் வெற்றி யுடன் பவனிவருகிறது. காப்புறுதிக் கம்பனிகள் வேறு, சுரண்டலுக்கு முழு மூச்சுடன் வேலை செய்கிறார்கள். செலவுக்கு வசதி இல்லாமலிருந்த மக்கள் ஏதோ சிறு தொகையைச் சேமித்து வைத்திருந்தார்கள். சிக்கன வாழ்வில் மண்போட்டு, வரவுக்குமிஞ்சிய செலவுக்கு வழி செய்யப்படுகிறது. சேமிப்புப் பணம் இப்பிரதேச அபி விருத்திக்குப் பயன்படுத்தப்படவில்லை.

## அறிவுரைகள் அமுலாக்கப்படவேண்டும்

ஒதுங்கி இருக்கப் பழகிய படித் தவர் கூட்டம், புது உலகம் மலரச் செய்யப் போராடியவர்கள், வருங்கால சுபீட்சத்துக்கும் ஒரு திட்டம் வைத்திருக் கிறார்கள்தானே; நம்மை யார் கேட்கப் போகிறார்கள்; கேட்டால் ஒத்துழைப் போம் என்று கூறிக்கொண்டு இருக் கிறார்கள். இழந்துபோன இருசகாப்தங் களின் முன்னேற்றத் தூரத்தை நடந்தோ, ஓடியோ கடக்கமுடியாது. பாய்ந்துதான் கடக்கவேண்டும். போர்க்கால சிந்தனை சமாதான கால புனர்நிர்மாண கட்ட மைப்புக்கு ஏற்றவாறு மாறவேண்டும். அதனை, புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் படித்தவர் கூட்டம் இங்கு பறந்து வந்து சில நாட்கள் நின்று சொல்லி விட்டுப்போனால் காரியம் முடிந்து விடாது. களத்தில் நின்று பணியாற்று பவர்கள் அந்த நிபுணர்களின் கருத்துக் களை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும். உள்ளூரில் மண்ணை நேசித் துப் புலம் பெயராது தங்கியிருக்கி றோம் என்று பெருமையுடன் பேசிக் கொண்டு, சும்மா இருப்பதால் பயன் இல்லை. பொருளாதார நிபுணர்கள், பொறி யியலாளர்கள், முகாமைத்துவ ஆலோ சகர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். நம் சமுதாயத் தின் பண்புகள், விழுமியங்கள் வரிசையறியும் ஆற்றல் அனைத்துமே அழிந்துவிட்டன. நிர்வாகத்துக்கு நூறு பொறியியலாளர் போதும் என் றால், எமது பல்கலைக்கழகங்கள் 600 பொறியியலாளரை ஆண்டுதோறும் வெளியே அனுப்புகின்றன. அவர் களுக்கு இங்கு வேலை இல்லை. அயல் நாடுகளில் அவர்கள் இரவு பகலாக உழைக்கிறார்கள். சனங்கள் தமது பிள்ளைகள் பொறியியலாளராக, மருத்துவர்களாக வந்தால்போதும் என்று நினைக்கிறார்கள் பாடசாலை செல்லும் சிறுவனைப் பதின்மூன்று ஆண்டுகளுக்கு முந்தியே பல்கலைக் கழகத்தில் மதிப்புக்குரிய துறையில் புகச் செய்யப் பகீரதப் பிரயத்தனம் செய்கிறார்கள்.

## கீழ் மட்டப் பணியாளர்கள்

இன்று நாட்டுக்கு வேண்டியவர்கள் உயர் பயிற்சி பெற்ற நிபுணர்களல்ல; அவர்களின் திட்டங்களைச் செயற் படுத்தக்கூடிய கீழ் மட்டப் பணியா ளர்களே. அழிந்துபோன நகரங்களை மீண்டும் கட்டி எழுப்பப் பாரிய கட்டட அமைப்பு நிறுவனங்கள், பல்தேசியக கம்பனிகள் முதலீடு செய்ய முன்வந் தாலும், இங்கு அவற்றின் செயற் பாடுகளுக்குப் போதிய மேசன்மார், தச்சர்கள், தொழிலாளர்கள் போதாது. கல்வியின் பிழையால், பெற்றோரின் எதிர்பார்ப்பால் பெரும்பாலான மக்கள் செய்ய வேண்டிய தொழில்களுக்கு ஆளில்லை. வேலையற்றோர் கூட்டம் வீதி வீதியாய் உலாவுகின்றது. படித தவர்கள் சமுதாயத்தின் வரிசையறி யும் திறனை வளர்க்கவேண்டும். எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்; எவற்றை இரண்டாம் பட்ச மாகப் பின்வைக்கலாம் என்று சிந்திக்க வைக்கவேண்டும். மக்களின் மன மாற்றமே முக்கியம்.

பொருளியலாளர் மிகக்குறுகிய பார்வை உடையவர்கள். சமூகத்தின் பொருளியல்சார் போக்குகளின் ஒரு அம்சத்தை மட்டும் அவதானித்துவிட்டு, அந்தச் சமூக நோயைத் தீர்ப்பதற்கு வழி ஒன்றைக் கண்டுபிடிப்பார்கள். மற்றொரு நாட்டில், அது சரிவந்தால் எமக்கு சரி வரும என்று முடிவு கட்டி விடுவார்கள். இன்று தேவையானது அனைத்து நிபுணர்களின் கருத்துக் களையும் ஒன்றிணைத்துப் பார்க்கும் ஆற்றல் மிக்க ஒரு குழு அல்லது மையம் தம்முள் அடிபடாமல் தம் துறைக்குத்தான் முதன்மையளிக்க வேண்டும் என்று வற்புறுத்தாமல் மக்க ளுக்கு எது அவசியம், எதனைப் பின் போடலாம் என்று தீர்க்க ஆலோசனை

### அவைமணி

செய்து, முடிவுசெய்து, அதனை மக்க ளிடம் பிரசாரம் செய்து அவர்கள் மனத்தைப் புதிய உலக நிர்மாணத் துக்கு ஆயத்தம் செய்யவேண்டும். உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் கூறுகிறது என்பதற்காக அவற் றிடம் கைநீட்டி நிற்கும் அரசு 'ஆமா' போடலாம். உலகளாவிய வணிகம், மருத்துவம், கல்வி என்று முன்னேறிய நாடுகள்தேன் பூசிய கசப்பு மருந்தை எமக்குப் புகுத்தி தம் இலாபத்தை உறுதிப்படுத்தலாம். ஆனால் பாதிக் கப்படக்கூடிய மக்கள் சிந்தித்துச் செயலாற்றாவிட்டால் எந்தவித முன் னேற்றமும் வராது. ஐம்பது வருடம் பின் நிற்கவே வேண்டும்.

**'வரிசை அறிதலோ அரிதே'**

\- புறநானூறு.

## ஜனார்த்தன் லண்டன் பயணம்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சை யில் தேசிய மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்ற பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவன் வி. ஜனார்த்தன் இன்று லண்டன் பயணமாகவுள்ளார்.

பாடசாலையின் பழைய மாண வர் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (உ)

## புங்கா விருது

(கொழும்பு)

இலங்கைக்கும் ஜப்பானுக்கு மிடையிலான இராஜ தந்திர உற வுகள் ஆரம்பிக்கப்பட்டு 50 வரு டங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இலங்கையிலுள்ள ஜப்பானிய தூத ரகம் ஒழுங்கு செய்துள்ள புங்கா விருது வழங்கும் வைபவம் இன்று கொழும்பு லயனல் வெண்ட் திரை யரங்கில் இடம்பெறவுள்ளது.

மனித வள அபிவிருத்தி கல்வி கலாசார அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொள்ள வுள்ளார் (உ-7)

## திருமலையில் பெண்கள் மாநாடு

(திருகோணமலை)

சமாதான உருவாக்கத்தில் பெண்களின் பங்கு முஸ்லிம், தமிழ் சமூகங்கள் மத்தியில் ஒற்றுமை யைப் பேணுவதில் பெண்களின் பங்கு, வட - கிழக்கின் புனரமைப்புத் திட்டங்களில் பெண்களுக்குச் சாத கமான பொருளாதாரக் கொள்கைகள் என்பவற்றை ஆராயும் வகையி லான பெண்கள் மாநாடு இன்றும் நாளையும் திருகோணமலை செல்வ நாயகபுரம் இந்துமகா வித்தியால யத்தில் நடைபெறவுள்ளது. (உ)

# வித்தியா தானத்தால் எம்மை வாழ வழிகாட்டும் உத்தமராம் ஆசிரியர் தம்மை வாழ்த்துவோம் !

### ஆசிரியர் தினத்தையொட்டிய கட்டுரை

"எழுத்தறிவித்தவன் இறைவனா வான்" என்னும் குருவாக்கை பெரு வாக்காக எண்ணி ஆசிரியரிடம் அன்பும், அடக்கமும் செலுத்தி வரவேண்டியது மாணவர்களாகிய எமது முக்கிய கடமையாகும்.

உடலை வளர்க்க உதவுவோர்
பெற்றோர்
அறிவை வளர்க்க உதவுவோர்
ஆசிரியர்கள்
உணவு சமிபாடடையும்
வரைக்கும்தான்
உடல் இறக்கும் வரைக்கும் தான்
உதவும்

ஆனால் ஆசிரியர்பால் கற்றதன் கல்வி பிறப்புக்கள் தோறும் தொடர்ந்து துணைபுரியும். இதனை தெய்வப் புலவ ராகிய வள்ளுவர்;

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி
ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"
\- குறள் 398 என்றார்.

ஒருவன் தான் ஒரு பிறப்பிலே கற் கின்ற கல்வியானது அவனுக்கு இப் பிறப்பிலே உதவுவது மட்டுமல்லாமல் தொடர்ந்து வரும் பல பிறப்பிற்கும் உதவும் என்பது பொருள்.

## இறைவன் உணர்த்தும் கல்விமான்

செல்வமானது ஒரு காலத்தில் சிதைவுறும். ஆனால் கல்விச் செல் வமானது கற்கும் தோறும் ஊற்றெனச் சுரக்கும். இப்படிப்பட்ட அழியாத செல் வத்தை அள்ளி வழங்கும் ஆசிரியரை நாம் எக்காலமும் மறந்துவிட முடி யாது. கல்விக்குத் தொடர்பானது அறிவு, அறிவுக்கு தொடர்பானது - உடல், உடலுக்குத் தொடர்பானது - உயிர், உயிருக்குத் தொடர்பானது - இறைவன் இந்த இறைவனை கல்வியறிவினால் உணர்த்துபவர் ஆசிரியர். எனவேதான் ஆன்றோர்கள் ஆசிரியரை சர்வ காரண ராக விளங்கும் ஆண்டவனுடன் ஒப் பிட்டு சமனாக அறியத்தந்துள்ளனர்.

குரு என்றால் அஞ்ஞானத்தை நாசம் செய்பவர் என்பது பொருள். 'குரு' என்பதில் 'கு' என்பது ஒளியையும் 'ரு' என்பது இருளையும் குறிக்கும். 'குரு' என்றால் இருளை நீக்கி ஒளியை ஏற்றுபவர் என்பது பொருள். எனவே, இந்த ஆசிரியராகிய 'குரு' எம் மனதிலே இருக்கின்ற அறியாமை என்னும் 'இருளை' நீக்கி 'ஒளியை' ஏற்றுபவர் ஆவார்.

நன்நெறியினைத் தானும் கடைப் பிடித்து, தன்னை நாடிவரும் மாண வனையும் நன்நெறியில் நிறுத்துப வரே 'குரு' எனப்படுகின்றார். ஒருவித பயனும் கருதாது பணத்திற்கா கவோ; புகழுக்காகவோ; பெயருக் காகவோ கற்பிக்காமல் சீடனிடம் கொண்ட கருணையால் மட்டும் கற்பிப் பவரே 'குரு' ஆவார்.

பக்தி இல்லாத பூஜையும், அரசன் இல்லாத நாடும், தானம் செய்யாத கைகளும், விசுவாசம் இல்லாத நட்பும், விபூதியில்லாத நெற்றியும், விரும்பத்தக்கவையல்ல; அதுபோல குருநாதர் இல்லாத மாணவனும் நன் னிலை அடைய மாட்டான். குருவை இம்சித்த மாணவனும் ஒருபோதும் முன்னேற மாட்டான்.

## குருவுரு சிந்தித்தல்

ஆசிரியரின் கட்டளையை மீறா மல் நடப்பது உடலால் செய்யும் தொண்டாகும். ஆசிரியரின் வடிவத் தையே தியானித்திருத்தல் மனத்தால் செய்யும் தொண்டு ஆகும். "தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே" என்கி றார் திருமூலர். ஆசானைக் கண்டதும் அன்பு பெருகும் உள்ளத்தோடு கை குவித்து வணங்க வேண்டும்.

"ஆசானைக் காண்தோறும் அன்பு ருகக் கைகுவியும்" - சிவஞானப்பிர காசவெண்பா. ஆசிரியரிடம் பண்புடன் நடந்து கொள்ளவேண்டும் அல்லாது அவரைப் பழித்துப் பேசக் கூடாது. ஆசிரியரை "உம்" என அதட்டிக் கூறியவர் பிணம் சுடுகின்ற சுடுகாட்டில் மரமாக முளைத்து நாய், நரி, கழுகுடன் ஒன்றாய் இருக்க நேரிடும். பின்வரும் பாடல் இதனை விளக்கு கின்றது.

'குருவை 'உம்' எனக்கூறுபவர்
எரிசுடலையில் பெருந்த
தருவாகியே இருந்து
திரிகழுகுகள் முதலியன
சேரவாழுவரே'

எனவே குருவை மனத்தாலும், சிந்தித்து பயபக்தியுடன் அவர் வழி நடந்து, கல்வியைக் கற்று வந்தால் மாணவர்களாகிய நாம் பிற்காலத் தில் பலராலும் போற்றப்படும் நற் பிரஜைகளாகத் திகழ்வோம் என்ப தில் எந்தவித சந்தேகமும் இல்லை எனக் கூறுவர். சைவத்தையம், தமி ழையும் இருகண்கள் எனக்கொண்டு மேன்மையடையச் செய்த நாவலர், "தானத்தில் சிறந்த தானம் வித்தியா தானம்" என்கின்றார். 'கல்வி அழகே அழகு" என்றும் நாலடியார் பாடலின் பொருள் உணர்ந்து, உலகில் உள்ள எப்பொருளையும் விட கல்விக்கே முத லிடம் உண்டு என்பதை அறிந்து கற்பித்த ஆசிரியரை மதித்துக் கற்று மேன்மை அடைந்து; இன்புற்று வாழ்வோமாக.

**பிரம்மஸ்ரீ சி. திசாகரசர்மா**
**யா/முத்துத்தம்பி ம.வி.**


2ம் லெப். மாலதி நினைவு நாள்

தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் 10.10.2002

2ம் லெப். மாலதி நினைவு நாளான, தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வுகள் வன்னிப் பெருநிலப்பரப்பு திறந்த வெளியரங்கில் நடைபெறக் காத்திருக்கின்றது...

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகள் ஒருங்கிணைந்து நடாத்தும்

மாபெரும் எழுச்சி நிகழ்வு



- மகளிர் படையணியின் இராணுவ அணிவகுப்புகள்
- மகளிர் படையணியின் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் ஊர்திகள் பவனி
- உயிர்க் கவிதையின் உயர் வேதம்... (நாடகம்)
- உண்மைச் சம்பவங்களைத் தாங்கிய உயிரை உருக்கிடும் கலை நிகழ்வுகள்
- விசேட படையணியின் வீர தீரச் செயல்கள்
- தமிழீழ இசைக்குழுவின்இசைவார்ப்புகள்
- அமெரிக்காவின் 'கிறீன் பரே' அணி யினரிடம் பயிற்சிகள் பெற்ற சிறலங்காவின் One Commondo, Two Commondo விசேட அணிகள் மகளிர் படையணியின் புதிய போர்த் தந்திரோபாய யுத்தியினால முறியடிககப்பட்ட மன்னகுளச் சமரின் மாதிரி வடிவ நிகழ்வு.
- இன்னும் பல நிகழ்வுகளும் இடம்பெறக் காத்திருக்கின்றன. . . .

வீழ்ந்தது விதை
எழுந்தது பயிர்
கடந்தது நெருப்பு
உயர்ந்தது கரம்.

பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும்... கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும்...
நேற்று எழுந்த எரிமலையை அணைத்தவர்கள். இன்று சமாதானப் பாதைக்கு வழி அமைத்தவர்கள்.
இந்த அக்கினிப்புக்களா...! நீங்களே வியந்து நிற்க. உங்கள பிள்ளைகள் வெற்றியோடு உங்களை நோக்கி...
.................................... காணத் தவறாதீர்கள் ....................................

மாலதி படையணியின் உருவாக்கத்தில்....
களத்தில் நிற்கும் போராளிகளின் குரலாக வெளிவருகின்றது...

வெஞ்சமரின் வரிகள்
பாடல் ஒலிப்பேழை

அன்பரசி படையணி, திலகா படையணி உட்பட ஆயிரக்கணக்கான பெண் போராளிகள் பங்குகொண்டு நடாத்தும் மாபெரும் எழுச்சி நிகழ்வினைக் கண்டு மகிழ அனைத்து மக்களையும் வருக... வருக... என அன்போடு அழைக்கின்றோம்.



காலம் - 10.10.2002
நேரம் - மாலை 3.00 மணி (தமிழீழ நேரப்படி)
இடம் - கிளிநொச்சி மத்திய விளையாட்டுத் திடல

நன்றி
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

மகளிர் படையணி,
தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம்.

# ஈஸ்வரப் பதவிபெற்ற சனியின் தோஷங்கள்

# குரு பார்வையாலும், சிவவழிபாட்டாலும் நீங்கும்

**புரட்டாதிச் சனி விரதம் சார்பானகட்டுரை**

புரட்டாதி மாதம் என்றதுமே புரட்டாதிச்சனி வழிபாடுமனதிலே வந்துவிடும். நவக்கிரகங்களில் ஒன்றாகிய சனீஸ்வரன் தரும் துன்பங்களிலிருந்து நீங்கி நல்வாழ்வுவாழ வேண்டுமென இந்நாளிலே விரதமிருந்து எள் எண்ணெய் எரித்து, காகத்திற்கு முதலில் உணவு படைத்து விட்டு, பின் உணவு உண்பது விரத ஒழுங்காகும்.

### சூரியன் சனி பகைமை

காகத்தை வாகனமாகக் கொண்ட சனீஸ்வர பகவான் சூரியனுக்கும் சாயா தேவிக்கும் மகனாகப் பிறந்தவன் சனிபிறந்துவிட்டான் என்பதைக்கேள்விப்பட்ட சூரியன், தனது தேர்ப்பாகனான சுதனுடன் மகன் சனீஸ்வரனைப் பார்க்க வந்ததும், முதலில் சனீஸ்வரனின் பார்வை பட்டதும் பிதாவாகிய சூரியனுக்கு குஷ்டரோகமும், சாரதி சுதனுக்கு கால் முடமுமாகியது.

இதனாற்றான் சூரியனுக்கும் சனிக்கும் கிரகபலாபலனிற் பிறவிப்பகை எனவும்-சூரியன் சனிபார்வைகளும் சூரிய தெசையிற் சனிபுத்தியும்கேடு விளைவிக்கும் எனசோதிட நூலோர் கூறுவார்கள்-இத்தகைய சனீஸ்வரன் சிவபக்தியில் உயர்ந்தவனாதலாலே தான்மற்றைய கிரகங்கட்கில்லாதஈஸ்வரபதவிகிடைத்தது நவக்கிரகங்கள் எல்லாம். நன்மைதீமைகளைமாறி மாறி வழங்குபவன வாயினும் சனிபகவான் மட்டுமே மக்களின் நன்மை தீமைகளைச்சீர் தூக்கிப் பார்த்துச்சரியான பலன்களை நன்றோ, தீதோ வழங்கிவிடுகின்றார். இதனாற்றான் மற்றைய கிரகங்களை விடச் சனீஸ்வரனுக்கு எல்லோரும் மிகவும் பயப்படுகின்றார்கள் எனலாம்.

### குருபார்வையும் சிவவழிபாடும்

சனீஸ்வரன் விஸ்வகர்மாவின் மகளைத் திருமணம் செய்தும் அவளைப்புறக்கணித்துவாழ்ந்ததால்- சனீஸ்வரன்பார்க்கும் பொருள்கள் கருகிவிட வேண்டுமென அவள் சபித்தாள். இந்தச்சாபம் நீங்கவேண்டுமென சிவனிடம் வேண்டவும்— குருபார்வையினாலும், சூரியவழிபாடு சிவவழிபடுகளாலும் விமோசனம் கிடைக்கும்என இறைவன்அருளினார்.

இதனாற்றான் ஏழரைச் சனி- அட்டமத்துச் சனி, ஜன்மச்சனி எனப்பல விதங்களாலும் சனிக்கிரகத்தால் துன்பப்படுபவர்கள் சிவ வழிபாட்டிலும், நந்திக்குநீர்வார்த்துக் குளிரச்செய்தும், சூரிய வழிபாட்டிலும் குரு வழிபாட்டிலும்ஈடுபட்டுதம்துன்பங்கட்கு நிவர்த்தி தேடிக்கொள்கின்றார்கள். மேலும் சனிக்கிரக

### நீர்வை மணி

தோஷம் உடையவர்கள் சனி வாரங்களில் எண்ணைமுழுக்காடுதலும்மகாவிஷ்ணு, ஆஞ்சநேயர் வழிபாடுசெய்தலும் தான் தனியே உண்ணாது, தன் சுற்றத்தைக் கூவி அழைத்து ஒன்றுகூடி உண்ணும் காக்கைக் குலத்தினை அழைத்து அவற்றிற்கு முதலில் உணவு இட்டு பின்பு உணவு உட்கொண்டு விரதம் நோற்பதும் சனிக்கிழமை வழிபாட்டின் சிறப்பாகும்.

### காகமே வாகனம்

சனீஸ்வரனின் வாகனமாகிய காகமும் இந்த உலகிலுள்ள சீவராசிகளுள் தனிச்சிறப்பு உடையதாகும். காகத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ள பழம்பாடல் கீழே எப்படி அதன் பெருமைபற்றி விளக்குகின்றதென்பதைப் பார்க்கலாம்.

காலை எழுந்திருத்தல்,
காணாமலே புணர்தல்,
மாலை குளித்து மனை
புகுதல்-சாலவும் உற்றா
ரோடு உண்ணல், உரை
யாடல் ஆறும்கற்றாயோ
காக்கைக் குணம்.

எனவே இப்பாடல் மூலம் எத்துறை நல்லவற்றையும் நாம் உணரமுடிகின்றது.

புரட்டாதிச் சனி வாரங்களிலே சனீஸ்வர வழிபாட்டாலும், காகங்கட்கு உணவு வைப்பதாலும் நாமும் சனீஸ்வரனின் துன்பங்களிற் பீடிக்கப்படாது நற்கதியடைய நல்லபடி வழிபாடுகளை நடத்துவோமாக.

# அடிப்படை சுகாதாரப் பயிற்சி

(சுதுமலை)

மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் உள்ள சங்கானை பிரதேச செயலர் பிரிவில் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட சுகாதாரத் தொண்டர்களிற்கான அடிப்படை சுகாதாரப் பயிற்சிவகுப்பு எதிர்வரும் 9 ஆம் திகதிபுதன கிழமை காலை 9மணிக்குசுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் அவரது பணிமனையில் நடைபெற உள்ளது

தொடர்ந்து 5 நாட்கள் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

வலி-மேற்கில் இயங்கும் பாலர் கல்விக்கான நிறுவனத்தின் ஆதரவில் சுமார்18 ற்கும் மேற்பட்ட கிராம சேவையாளர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 30 தொண்டர்கள் இப்பயிற்சியைப்பெறவுள்ளனர். (உ-252)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(சண்டிலிப்பாய்)

வலிகாமம்தென்மேற்கு பிரதேச செயலக பிரதேச அபிவிருத்திஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கள் மு ப 10-30 மணிக்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-252)

**ஜனாதிபதியின் உரையை**

# ஒலி, ஒளிபரப்பிய ஊடகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும்வகையில் அமைந்த, ஜனாதிபதியின் உரையை ஒலி, ஒளிபரப்புச்செய்த ஊடக நிறுவனங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க திட்டமிட்டிருப்பதாக பிரதமரின் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் அனுராதபுரத்தில் நடைபெற்ற ஜனாதிபதி மிலேனியம்' புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தில் ஜனாதிபதி ஆற்றியஉரையின் தொகுப்பை ஒளி, ஒலிபரப்புச் செய்த 7 ஊடகநிறுவனங்களுக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பிரதமரின் சட்டத்தரணிகள் நிறுவனமான 'சபாரட்ன' சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளது.

ரூபவாஹினி, சுயாதீன தொலைக்காட்சிசேவை, லக்கண்ட, சுவர்ண வாஹினி உள்ளிட்ட 7 நிறுவனங்களுக்கு எதிராகவே சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, 'மிலேனியம் புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்தில் உரையாற்றுகையில் றோயல் கல்லூரியில் தனதுபிள்ளையை சேர்ப்பதற்கு, தரகர்ஒருவர் ஊடாக அக்காலப்பகுதியில் கல்வியமைச்சராக இருந்த பிரதமருக்கு இலஞ்சம் வழங்க கோரியதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

**வடமராட்சி கிழக்கில்**

# பச்சை மரம் தறிக்க அரசியல் பிரிவு தடை

(மந்திகை)

வடமராட்சி கிழக்கிலுள்ள சிறு காடுகளில்மரங்கள் வெட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் வல்வெட்டித்துறை அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுத்துள்ள செய்திக் குறிப்பில்' வடமராட்சி கிழக்கு வல்லிபுரம், அம்பன், குடத்தனை மணல்காடு, கெற்பலி பகுதிகளிலுள்ள காடுகளில்சவுக்கு, சஞ்சீவி பொற்பத்தை, கண்டல் மரங்கள் வெட்டப்பட்டு வேறிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாக முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் மரங்கள் வெட்டப்படுவதனால் இயற்கைச்சூழல்பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் வடமராட்சி கிழக்கில் மேலும்மண்ணரிப்பு ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு

எனவே இப் பகுதிகளில் பச்சை மரங்கள் வெட்டுவதை கைவிடுமாறும் மரம் வெட்டுவோர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அரசியல்துறையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-23)

**சமுர்த்தி அதிகாரிகள் மீது தாக்கு**

# அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

மெதுருகிரியாவில் சமுர்த்தி அதிகாரிகள் மீது இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பந்தமாக உடனடியாகவிசாரணைகளை நடத்தி 48 மணித்தியாலங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பொலிஸ்மா அதிபர் ரி. ஈ. ஆனந்தராஜாவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட சமுர்த்தி அதிகாரிகள் அனைவருக்கும் சகல உதவிகளும் வழங்கப்பட வேண்டும் என்றும்,

தமது கடமைகளை உரிய முறையில் செய்யாது தாக்குதலுக்கு உதவியளித்த பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற் கொள்ளப்பட்ட வேண்டும் எனவும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் (உ-8)

**செம்பியன்பற்று பாடசாலை**

# புனித பிலிப்பு ஆலய மண்டபத்தில் இயங்குகிறது

(திருநெல்வேலி)

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வடமராட்சியில் இயங்கி வந்த செம்பியன் பற்று றோ.க.த.க பாடசாலை கடந்த புதன்கிழமை முதல் செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலய மண்டபத்தில் இயங்கி வருகிறது.

பாடசாலை அதிபர் எஸ். ஜெயந்திரன் தலைமையில் இடம் பெற்ற இவ் ஆரம்ப வைபவத்தில் வடமராட்சி கல்விக்கோட்ட பிரதிப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர்வி.பவேலாயுதபிள்ளை, வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகன், வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பிரதிப் பொறுப்பாளர் புனிதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ43)

# சான்றிதழ் வழங்கல்

(சுண்டுக்குளி)

அகில இலங்கை வலைபந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையுடன், யாழ். மாவட்ட வலைபந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்த வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கானசான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த திங்களன்று யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில், யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி ஏ. எவ்.ஜே. றூபசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதன் கலந்து கொண்டார். (உ-110)

**பஸ் தரிப்பிடங்கள்**

# இல்லை

(திருநெல்வேலி)

நெடுந்தீவில் பஸ் தரிப்பிடங்கள நிறுவப்படாமையால் அப்பகுதி மக்கள் தாம் விரும்பியஇடங்களில் பஸ்ஸிற்காகக் காத்து நிற்கின்றனர்.

இதேவேளை, வடபிராந்திய போக்குவரத்துச் சபை, தரிப்பிடத் தகடுகளை ஏற்கனவே நெடுந்தீவு பிரதேச சபைக்கு வழங்கி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது (உ-43)

**புளியங்கூடல் கிராமம்**

# சமூக வலுவூட்டல் திட்டத்தில் இணைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் புளியங்கூடல் கிராமம் நியாப் திட்ட சமூக வலுவூட்டல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்படி சமூக வலுவூட்டல் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த திங்கட்கிழமை புளியங்கூடல் நெசவு மண்டபத்தில் புளியங்கூடல் கிராம அலுவலர் மு. விஜயரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

புளியங்கூடல் கிராமத்தில் சமூக வலுவூட்டல் நடவடிக்கைக்காக சேவாலங்கா மன்றம் ஒரு சமூக வலுவூட்டாளரினையும் நியமித்துளளது. (உ-75)

# புத்தாயிரமாண்டு புலமைப் பரிசில் வழங்கல் வைபவம்

(யாழ்ப்பாணம்)

புத்தாயிரமாண்டு புலமைப் பரிசில் வழங்கும்வைபவம்எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு திருகோணமலை கடற்படைத்தள கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க கலந்துகொண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசிலை வழங்கவுள்ளார்.

இந் நிகழ்வில் கலந்துகொள்ளும் வகையில் குடாநாட்டுப் பாடசாலைகளில் இருந்து செல்லும் மாணவர்கள் தங்குவதற்கென திருமலை புனித மரியாள் கல்லூரி, திருமலை இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை கோணேஸ்வரம் இந்துக்கல்லூரி ஆகியன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (உ-6)

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல்கடன்
குறள்

# வலம்புரி

## புரியாத புனர் நிர்மாணம்

யுத்தத்தினால் மோசமாகப் பாதிப்படைந்த வடபகுதியைப் புனர் நிர்மாணம் செய்வதற்கான ஏற்பாடுகள் பல மட்டங்களிலும் நடைபெறுவதாக யாழ்ப்பாணத்திற்கு வரும் அமைச்சர்களும், அதிகாரிகளும் தெரிவித்த வண்ணம் உள்ளனர். இதனை செய்தி ஊடகங்களும் முக்கியப்படுத்துகின்றன. ஆனால் இதுவரை வடபகுதியில் எங்காவது புனர்நிர்மாணப் பணிகள் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

அமைச்சர்களும் அதிகாரிகளும் யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி வந்து போகின்றனர். ஆனால் ஆகக்குறைந்தது யாழ் மாநகரசபையின் எல்லைக்குள் இருக்கின்றவடிகால்களைத் துப்புரவு செய்வதற்குக்கூட நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

யாழ் மாநகரசபைப் பகுதியில் உடைவுற்றிருக்கின்ற வடிகால்களினால் சுகாதாரச் சீர்கேடுகள் மலிந்து போயுள்ளது. இந்நிலையில் தென்னிலங்கையிலிருந்து ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் யாழ் நகர மையத்திற்கு வந்து போவதால் யாழ் மாநகரத்தின் சுகாதாரவசதிகள் கவனிக்கப்படுவது மிகமிக அவசியமாகும். ஆனால் சுகாதார வசதிகளை ஏற்படுத்தக்கூடிய வளங்கள் யாழ் மாநகரசபையிடம் இல்லாதநிலையில் அவை சாத்தியமற்றுப் போகின்றன.

அதேபோன்று யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மக்கள் மீளக்குடியமர்ந்த இடங்களில் இதுவரை எதுவித புனர்நிர்மாணப் பணிகளும் இடம்பெறவில்லை.

புனர்நிர்மாணம் என்பது மக்களின் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதன் ஓர் நடவடிக்கையாக இருக்கும். யுத்தத்தால் வீட்டை இழந்து, சொத்துக்களை இழந்து நிர்க்கதியான நிலையில் உள்ளமக்களின் அடிப்படைத் தேவைகள் உடனடியாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதற்கு அரச - அரசசார்பற்ற அமைப்புகள் தம்மால் இயன்ற நிதியுதவிகளை வழங்குவதுடன் மேற்கொள்ளப் படுகின்ற புனர்நிர்மாணப் பணிகள் சரியாக முன்னெடுக்கப் படுகின்றதா என்பதையும் மேற்பார்வை செய்வது அவசியமாகும்.

# சரித்திரத்தையே மாற்றியமைக்க வல்லதான எண்ணங்களின் தொகுதி சாமானியமானதல்ல!

**டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி**

நாய்களுக்கு நமது எண்ணங்களைப் புரிந்துகொள்ளும் சக்தியிருப்பதை நீங்கள்கண்டிருக்கக் கூடும். எங்கள்வீட்டு நாய் சிலசமயம் தவறு செய்துவிட்டு குற்றவாளிபோல்விழித்துக் கொண்டு என் முகத்தை பார்ப்பதை நான் நினைவுகூர்கிறேன். எண்ணங்கள் நமது மனதில் உணர்ச்சிகளாகப் பதிந்திருப்பதாக உளநூலார் கூறுகின்றனர்.

எண்ணங்களை, வார்த்தைக்கு அப்பாற்பட்ட ஒருவித சக்திமூலம் மிருகங்கள் உணர்ந்து கொள்கின்றன. ஓர் ஊரில் நாய்களைப் பட்டியில் விட்டு விட்டுச் சொந்தக்காரர்கள் வெளியூர் சென்றார்கள். அவர்கள் திரும்பி வரும் நாளன்று பட்டியிலிருந்த நாய்கள் மிகச் சாதாரண முறையில் குரைத்ததையும், பழகியதையும்தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்ததையும்பட்டிக் காவலர்கள் கண்டார்கள்.

### தனிச் சக்தி

பிளாரிடா என்ற மாநிலத்தில் டால்பின்னெனப்படும்சுறா போன்ற ஒருவகை மீன்களை வளர்த்துப் பழக்கப்படுத்தி சோதனைக்கு உபயோகித்து வந்தார்கள். ஒருநாள் அவற்றைக் கொண்டுபோய் கடலில் விட்டுவிடுவது என்றும் இனி அவை சோதனைக்குத்தேவையில்லை என்றும் தீர்மானித்தார்கள். அன்றிலிருந்து அங்கிருந்த சில டால்பின்கள் உணவருந்த மறுத்துவிட்டன. நான்கு நாட்களில் தங்களைப் பட்டினி போட்டு மாய்த்துக் கொண்டன. ஏனெனில்அவை அவ்வளவு அன்புடன் வளர்க்கப்பட்டவை. அவற்றால்பிரிவைச் சகிக்க முடியவில்லை. எண்ணங்கள் பிற உயிர்களிடம் வாய்ச்சொல் மூலம் மட்டும் தான் பரவுகின்றன என்பதில்லை. ஏதோ ஒரு தனிச் சக்தியாக அவை பரவுகின்றன.

விஞ்ஞானத்தில்இன்றுவரை மூன்றுமுக்கியசக்திகள் இருப்பதாகக்கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒன்று, புவியீர்ப்புச்சக்தி இரண்டு மின்காந்த சக்தி மூன்றுகருப்பொருள் சக்தி. இம்மூன்று பெருஞ் சக்திகளுக்கும் எண்ணசக்திக்கும் இது வரை ஏதும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை. மின்காந்த சக்தி புகாதகாங்கிரீட்அறைக்குள்ளிருந்து எண்ணங்களை வெளியில் அனுப்ப முடியும். புவியீர்ப்புச் சக்திக்குஅப்பால் இருந்து வானவெளிவீரர் கேப்டன் மிக்சல் எண்ணங்களைப் பூமிக்கு அனுப்பி வைத்தார், ஆகவே, எண்ணசக்தி இதுவரை அறியப்படாத ஒருதனி வகைச் சக்திஎன்று தான் கூற வேண்டும்.

### மனம் பற்றிய ஆராய்ச்சி

ரஷ்யாவில் மனம் பற்றிய ஆராய்ச்சி அதிகம் நடைபெறுகிறது அவர்கள் மனத்தைஒரு ‘ஜீவரேடியோ’ என்று அழைக்கிறார்கள். மனம் மூலம் மாஸ்கோவிலிருந்து லெனின் கிராடிற்குச் செய்தி அனுப்பினார்கள். இதைப்பற்றி அறியும் போது அமெரிக்க அரசாங்கத்திற்கு கவலை ஏற்படுகிறது. ஏனெனில் தனது சோதனைச் சாலையில் அமர்ந்தவண்ணம் ஒரு ரஷ்ய மனவிஞ்ஞானி, அமெரிக்க ஜனாதிபதியின் மனதில் ரஷ்யாவைப் பற்றி என்ன எண்ணங்கள் ஓடுகின்றன என்று எளிதில் அறிந்து கொள்ளக்கூடும். பிறகு மாற்றுக்குத் தன் எண்ணம் ஒன்றைச் செலுத்தி அமெரிக்க ஜனாதிபதியின் மன ஓட்டங்களை மாற்றிவிடமுடியும்.

இவையெல்லாம் கற்பனை அல்ல நாளை நிகழக் கூடியவை. இதை அறிந்து, அமெரிக்கவானவெளி ஆராய்ச்சிக் கழகம் இதுபற்றிய ஆராய்ச்சிகளில் ரகசியமாகவும் மும்முரமாகவும் ஈடுபட்டிருக்கிறது. வானவெளியில் செயற்கைச் சந்திரனைப் பறக்கவிடு முன், ஒருசமயம் ரஷ்யாவின விஞ்ஞானமுன்னேற்றம் பற்றி ஜீன்டிக்சன் என்ற அமெரிக்கப் பெண்மணி தம்மிடமுள்ளஒரு கண்ணாடிக் கோளத்தைப் பார்த்து ஜோசியம்கூறினார். அவர் அப்படியே தத்ரூபமாக வானில் பறக்கவிருந்த செயற்கைக் கோளை விபரித்தார். அதன் பலனாக மறுநாளே அவர் ஒரு ரஷ்ய உளவாளியாக இருப்பாரோ என்று சந்தேகித்து, அமெரிக்க ரகசியப் பொலிஸார் அவர் வீட்டுக்கு வந்து விட்டனர். கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று எல்லாவற்றையும் பார்த்துத் தீர்க்கமாக ஜோசியம் கூறும் வல்லமை படைத்த புகழ் பெற்ற பெண்மணி திருமதி டிக்சன்.

### யூரிகெல்லரின் சாதனை

எண்ணங்கள் மூலம் உயிரற்ற ஜடப் பொருள்களைக் கூட ஆட்டி வைக்கலாம் என்பதை விஞ்ஞானிகள் கண்கூடாகக் கண்டிருக்கின்றனர். யூரிகெல்லர் என்ற இஸ்ரேல்காரர் ஒரு சமயம், தமது மன எண்ணங்களை ஒரு முகப்படுத்தி ஓர் உலோகத் துண்டை வளைத்துக் காட்டினார். எண்ணங்கள் நமது உடலை மாத்திரம் பாதிப்பதில்லை. பிற உயிர்களைப் பாதிக்கும்; ஊடுருவும். ஏன், உயிரற்ற திடப் பொருள்களைக் கூட ஆட்டிப் படைக்கும் வலிமை படைத்தவை அவை. ஆகவேதான், நாம் என்றும் நல்ல எண்ணங்களைப் பரவவிடுவது நல்லது.

உண்மையிலேயே, நம்மிடம் பெரிய ஜீவரேடியோ இருக்கிறது. மனம் என்ற அந்த ஜீவரேடியோ மூலம் நாம் உற்சாகத்தையும், தைரியத்தையும், மகிழ்ச்சியையும் பரப்பலாம். நாமும் மகிழ்வுடன் இருக்கலாம், அல்லது நமது வானொலி மூலம் அழுகுரலை, துக்கத்தை, இயலாமையைப் பரப்பிக் கொண்டிருக்கலாம், இதன் மூலம் நாமும் நொந்து, பிறரையும் நோகச் செய்யலாம். நாட்டில் ஓரிரு அழுகுரல் தலைவர்கள இருந்தால் போதும் எல்லா வற்றிலும் குற்றம் கண்டு வாழ்வையே நரகமாக்கி விடமுடியும் ஓரிரு அழுகுரல் கவிஞர்கள இருந்தால் போதும் வாழத் தெரியாதபொதுமக்களதுவாழ்க்கையில்தன் சோகத்தைச்சூடேற்றி நாட்டைச் சுடுகாட்டிற்கு அழைத்துச் செல்லலாம், ஓரிரு அழுகுரல மதத் தலைவர்கள், ஆண்டவனைக் காட்டிப் பயமுறுத்தி மக்களை இருளில் கொண்டு செல்லலாம்.

ஒரு நாடு முன்னேறுகிறதா, பின்னடைகிறதா, தேங்கிக் கிடந்து நாற்றமெடுக்கிறதா என்பது அந்த நாட்டின் பல்வேறு துறைத்தலைவர்களையும், மக்களையும் பொறுத்தது; அவர்கள் கொண்டிருக்கும் எண்ணங்களைப்பொறுத்தது, அங்கே நல்லவர்கள இருக்கிறார்களா, சுயநலக்காரர்கள் இருக்கிறார்களா, அல்லது சோககீதம் பாடுபவர்கள் இருக்கிறார்களா என்பதைப் பொறுத்தது. நல்லவர்களையும், தீயவர்களையும் எடைபோட்டால் யார் மிஞ்சுகிறார்கள் என்பதைப் பொறுத்தது,

### எண்ணத் தொகுதியின் வலிமை

மக்களின் எண்ணத் தொகுதிதான் ஒரு நாட்டின் வளர்ச்சியாக, முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறது; அல்லது அழிவின் அறிகுறியாக அமைகிறது. ரோம் சாம்ராஜ்யம் அழியுமுன், அது குடிபோதையிலும், இன்பப் போதையிலும் காலங்கழிந்ததைப் பற்றிச் சரித்திராசிரியர்கள் எழுதுகிறார்கள். அசோக சாம்ராஜ்யத்தின் முக்கியத்துவத்தை அங்கே அன்று நிலவிய எண்ணங்கள் மூலம்- இன்று நாம் உணர்கிறோம். சங்க காலத்தின சிறப்பை அன்று பாடிய கவிஞர்களின் எண்ணங்களிலிருந்து அறிகிறோம்.

இந்திய நாடு மகத்தான தலைவர்களை வழங்கியிருக்கிறது. காந்தி, நேரு, பாரதி, அண்ணா என்று அவர்கள் வழங்கிய எண்ணங்கள் எல்லாம் புனிதமானவை- உயர்ந்தவை. உண்மை, நேர்மை, வீரம், இனிமை என்று எல்லாம் மகத்தான எண்ணங்கள், நாம் இதை நினைவில் கொவள வேண்டும், புத்தரின் எண்ணங்களால் சரித்திரம் எப்படி மாறியது என்பதை எண்ணிப்பாருங்கள். புத்தர் தம்முடன் எண்ணங்களைத் தவிர வேறு என்ன கொண்டுவந்தார் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள். யேசு கிறிஸ்துவின் எண்ணங்கள எப்படி ஐரோப்பிய சமுதாயத்தை மாற்றி அமைத்தது என்பதை எண்ணிப் பாருங்கள்: ஆப்பிரகாம் லிங்கன, காந்தி என்று இவர்களெல்லாம் எப்படிச் சில எண்ணங்களுடன் வந்து, உலகின் சரித்திரத்தை மாற்றி அமைத்தார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள்.

‘தேடிச் சோறு
நிதந் தின்று- பல
சின்னஞ்சிறு கதைகள
பேசி-மனம்
வாடித் துன்பமிக
உழன்று - பிறர்
வாடப் பல செயலகள்
செய்து’ என்று

பாடினார் பாரதி, அத்தகைய கீழான எண்ணங்களாலா உங்கள் உள்ளம் என்ற கோயிலை நிறைக்கப் போகிறீர்கள்? இல்லை, நல்ல எண்ணங்களை உள்ளே விடுவோம், அதனால் நாமும் உயர்வோம். நாடும் உயரும்.

# தினசரி தியானம்

## உள்ளுக்குள்

மகிழ்ச்சி, ஒய்வு, நிம்மதி எல்லாம் உங்களுக்குள்ளேயே இருக்கின்றன. எனவே ஆன்மீகத்தை நாடுபவர் தன்னுள் நோக்க வேண்டும். அவர் ஒன்றை எல்லாவற்றிலும், எல்லாவற்றையும் ஒன்றிலும் காணும் சமநோக்குடையவராக இருக்க வேண்டும். உயர்ந்தது, தாழ்ந்தது என்று வேற்றுமை பாராட்டக் கூடாது.

சுவாமி சிவானந்தர்

# வாதப் பிரதிவாதங்கள் முடிவடைந்தன

## தீர்ப்பு விரைவில்

(கொழும்பு)

18, 19 வது அரசியல் அமைப்புத் திருத்த சட்ட மூலம் தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான வாதப் பிரதிவாதங்கள் நேற்று முன்தினம் முடிவடைந்துள்ளன.

இதனையடுத்து இம்மனுக்கள் மீதான தீர்ப்பை ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் நீதிபதிகள் விரைவில் அனுப்பி வைப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# முன்னாள் எம்.பியின் மரணம்கொலைஎனத்தீர்ப்பு

(வவுனியா)

முன்னாள் வன்னிமாவட்டப் பாராளுமன்றஉறுப்பினர் அன்ரனி இமானுவேலின் மரணம் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் இவரின் மரணம் தொடர்பாக இவரது மனைவி, அவரது இரு மெய்ப்பாதுகாவலர்கள, வேறு இருவர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# தமிழர்கள் தமது தாயகத்தில் உரிமையுடன் வாழ படையினர் முற்றாக வெளியேற வேண்டும்

## சரணடைந்த சிப்பாயை ஒப்படைத்து இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் எமது தலைவர் மீதும் கொண்ட நம்பிக்கையினால்தான் இந்த இராணுவச் சிப்பாய் எம்மிடம் வந்து சரணடைந்துள்ளார். என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட அரசியல் துறையில் சரணடைந்த இராணுவச் சிப்பாய் இரத்நாயக்கா ஜெகன் றுவான்குமார (வயது 26)வை யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி நேற்று மாலை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைத்து பேசுகையில் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்:

எம்மிடம் சரணடைந்த இந்த இராணுவச்சிப்பாயை தமிழ் மக்களின் உண்மையான, நியாயமான, உன்னதமான உரிமைப் போராட்டம் பற்றி நன்கு உணர்ந்திருக்கின்றார். தமிழ் மக்களுக்கு எதிரான அநீதியான போராட்டம் பற்றியும் இவர் உணர்ந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

நீண்டகாலம் இனத்துவேசம் கொண்டு போர் தொடுத்தவர்கள் இன்று தமிழர்களின் உண்மையான சுயநிர்ணய உரிமையை உணர்ந்துள்ளார்கள்.

எமது தேசியத்தலைவர் மீது வைத்த நம்பிக்கையினால் எம்மிடம் சரணடைந்துள்ள அவரை அவரது மனைவி பிள்ளைகளிடம் ஒப்படைப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் தமிழர்கள் சுய உரிமையுடன் வாழ வேண்டுமென்றால் இங்குள்ள எல்லா இராணுவச்சிப்பாய்களும் வெளியேறி தமிழர் தாயகத்தில் தமிழர்களை வாழவிட வேண்டும் என்றும் கூறினார். (ம)

### சமாதான...

யிலும் தேவை ஏற்படும் போது நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பின்போது ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் கலந்து கொண்டுள்ளார்.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையில் இம்மாத இறுதியில் இடம் பெறவுள்ள இரண்டாம் கட்டச் சமாதானப்பேச்சுவார்த்தைக்கு முன்னதாக அமைச்சர் மிலிந்த மொறகொட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை வன்னியில் சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# யாழ் வந்த அமைச்சர் மகிந்த தலைமையிலான குழு மனித உரிமைகள் குறித்து விரிவாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் மனிதவுரிமை நிலைமைகள் பற்றி ஆராய்வதற்காக நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தொழிற்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக் குழுவினர் நேற்றுக் காலை யாழ் மாவட்ட நீதிமன்றத்திற்குச் சென்று நீதிபதிகளுடனும், சட்டத்தரணிகளுடனும் மனித உரிமைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடினர்.

இக் கலந்துரையாடலின் போது நாட்டில் சமாதான சூழ்நிலை ஏற்பட்ட பின்னர் யாழ் குடாநாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பந்தமான வழக்குகளை அவர்கள் பார்வையிட்டனர்.

இச் சந்திப்பை அடுத்து மு.ப 11 மணியளவில் யாழ் செயலகத்திற்கு வருகை தந்த குழுவினர் யுனிசெவ், யு.என்.எச்.சி.ஆர், ஐ.சி.ஆர்.சி, பவுண்டேசன் ஆகிய வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து மனித உரிமைகள் சம்பந்தமாகவும், அதில் வெளிநாட்டு நிறுவனங்களின் பங்களிப்புக்கள் தொடர்பாகவும் விரிவாகக் கேட்டறிந்தனர்.

இதன் பின்னர் குடாநாட்டிலுள்ள இராணுவ உயர் அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள் , கடற்படை உயர் அதிகாரிகள் ஆகியோரையும் அமைச்சர் தலைமையிலான குழுவினர் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது அண்மைக் காலமாக கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாகவும், பொலிஸ் நிலையங்களில் பொதுமக்களின் முறைப்பாடுகளை தமிழில் பதிவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய வசதிகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (த -6-43-77)

### நோர்வே...

புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் மற்றும் முக்கியஸ்தர்களையும் சந்தித்து பேச்சுவாரத்தை நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### மயிலிட்டி...

இரண்டு தமிழர்களின் உதவியுடன் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ளார்.

சரணடைந்த இராணுவச் சிப்பாய் இரத்திநாயக்கா ஜெகன்னுவன்குமார நேற்று மாலை யாழ் கண்காணிப்புக்குழுத் தவைரிடம் விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்டார். (ம-06)

### சாகும்வரை...

அவர்களின் வழமையான வாக்குறுதிகளை எற்கவோ தயாரில்லை என்று அவர்கள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளே களுத்துறைச் சிறைச் சாலையில் உள்ள 139 தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் இன்று 5வது நாளாகவும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள உண்ணாவிரதப் போராட்டம் இன்று 3ஆவது நாளாகவும் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.(ந-5)

நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பொலிஸாரை படத்தில் காணலாம்



# பாடசாலை மாணவர்கள் இருவர் பஸ் மோதி மரணம்

## வத்தளையில் சம்பவம்

(நீர்கொழும்பு)

வத்தளைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற பஸ் விபத்தில் இரண்டு பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த மாணவர் மஞ்சள் கோட்டினூடாக பாதையை கடக்க முற்பட்டபோது நீர்கொழும்பு நோக்கி வேகமாக வந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி ஒன்று அந்த மாணவர்களை மோதியதை அடுத்து அவர்கள் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

இச் சம்பவத்தை அடுத்து பொதுமக்களும், மாணவர்களும் பஸ் வண்டியைத் தாக்கிய போது நிலைமையை கட்டுப்படுத்த முடியாத பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டு பிரயோகம் செய்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதிப் போக்குவரத்து பல மணி நேரம் தாமதமாகியது. (ம)

### ஜனாதிபதி....

திபதியும் பிரதமரும் அடிக்கடி சந்தித்துப் பேசி சந்தேகங்களைப் போக்கவுள்ளனர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவும் அடிக்கடி ஒருவரை ஒருவர் குற்றம சாட்டிப் பேசிவருவது நாகரிகமான அரசியலுக்கும் சமாதான முயற்சிக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடியதாக இருப்பதினால் அது சமாதான முயற்சிகளில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

இவற்றையெல்லாம் விடுத்து இருவரும் மனம்விட்டு கருத்து பரிமாறல்களை மேற்கொண்டு கொடியயுத்தத்திற்கு முடிவுகட்ட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


## நல்லூர் பிரதேச சபை
## திருநெல்வேலி நவீன சந்தை
### மேல்மாடிக் கடைகளுக்கான கேள்வி அறிவித்தல்.

திருநெல்வேலி நவீன சந்தை மேல்மாடிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தலின் கால எல்லை கீழ்க்கண்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான விபரங்களை 05.09.2002 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

கேள்விப்பத்திர விநியோகம :- 09.10.2002 புதன்கிழமை நண்பகல் 12.00மணிவரை.
கேள்விப்பத்திரம ஏற்கும் திகதி :- 10.10.2002 வியாழககிழமை மு.ப10.00மணிவரை.
கேள்விப்பத்திரம் திறக்கும்திகத :- 10.10.2002 வியாழக்கிழமை பி.ப 2.00 மணி

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி,
01.10.2002

க.மணிபல்லவராஜன், I.P.U.M
தலைவர்.
[C/5106]



### வேலணை பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்
## கிளைக்குழுத் தேர்தல்

06.10.2002 ஞாயிற்றுக்கிழமை.

27.09.2002ம் திகதிய உதயன் பத்திரிகை அறிவித்தலுக்கமைய வேலணை ப.நோ.கூ.சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் நாளை (06.10.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் மேற்படி வேலணை ப.நோ. கூ. சங்கத்தின் சகல வாக்காளர்களும் (வன்னியில் சேர்ந்த அங்கத்தவர்கள் உட்பட) அன்றைய தினம் சமுகமளித்து வாக்களிப்பில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
வே. செல்லத்துரை,
செயலாளர்.

ச. நல்லநாதன்,
தலைவர்.
[5987]


# ஈராக மீதான அமெரிக்காவின் எச்சரிக்கை பெற்றோலியத்தின் விலையை அதிகரிக்கும்

## அதிகாரிகள் முன்கூட்டியே அறிவிப்பு

(கொழும்பு)

ஈராக் மீது தாக்குதல் நடத்துவதென்ற அமெரிக்க மிரட்டல்கள் அதிகரித்து வருவதையிட்டு பெற்றோலியப் பொருட்களின் விலைகள் இம்மாதம் அதிகரிக்கப்படலாம் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதத்தில் சர்வதேச விலைகளின்படி புதிய விலைகள் பத்துத் தினங்களில் அறிவிக்கப்படும் என்று பெற்றோலியக் கூட்டுத்தானத் தலைவர் தாகம் விமலசேன தெரிவித்துள்ளார்.

சர்வதேச விலைகளை அனுசரித்தே கூட்டுத்தாபனம் கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து உள்நாட்டு விலைகளை தீர்மானித்து வருகிறது. இதேவேளை சமையல் வாயுவின் விலை சர்வதேச சந்தையில் 40 டொலர்களால் அதிகரித்துள்ளது என்றும் இதனால் உள்நாட்டிலும் விலைகளை அதிகரிக்க வேண்டியது தவிர்க்க முடியாதது என்றும் ஷெல் சமையல் வாயு நிறுவனத்தின் தலைவர் றொபட்டோ மோரான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையல்:-ஷெல் நிறுவனம் இப்பொழுது நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதால் விலை அதிகரிப்பு அதனையும் ஈடு செய்யக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவித்தார். ஒரு சிலிண்டர் சமையல் வாயுவின் சில்லறை விலை 150 ரூபாவினால் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

### புலிகள்...

தடைகளை மேற்கொண்டதுடன் வீதிகளில் ரயர்களைக் போட்டு எரித்துள்ளனர். இதன் காரணமாக போக்குவரத்துப் பாதைகள் மதியம் வரை மூடப்புட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்ட தலைமை பொலிஸ் அதிகாரி மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து இந்த வதித்தடைகள் நீக்கப்பட்டு போக்குவரத்துச் சேவைகள் வழமை நிலைக்கு வந்துள்ளன.கைதான இராணுவத்தினர் ஆறு பேரையும் விடுவிக்காவிட்டால் ஹர்த்தால் நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ந-5)


சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெய்

V.S.P ஸஞ் ஓயில்

தயாரிப்பாளர்

பிரேமா ஸ்ரோர்ஸ்

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [C/4839]


கானுயர மரம் வளர்த்தால் வானுயர மழை பொழியும்

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.